விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 264 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 23 சனிக்கிழமை (09.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## மக்களின் கோபத்தை குறைத்து மதிப்பிடாதீர்கள்

# இரத்த வெள்ளம் நாட்டில் ஓடும்

## அரசுக்கு சந்திரிகா எச்சரிக்கை



(கொழும்பு)

மக்கள் அனைவரும் அரசின் மீது கோபமடைந்துள்ளனர். அவர்களின் கோபத்தை குறைத்து மதிப்பிடாதீர்கள். நாட்டில் இரத்த வெள்ளம் ஓடும் அபாயம் உள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### சண்டிலிப்பாயில்

## வீடு புகுந்து திருட்டு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் பகுதியில் உள்ள வீட்டிலேயே நேற்று முன்தினம் இரவு திருடர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர்.

அந்த வீட்டில் 15

### பலாலி கிழக்கில்

## குளவி கொட்டு ஐவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி கிழக்கு பகுதியில் குளவி கொட்டுக்கு இலக்காகி ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்றுப் பகல் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்த ஐவ 15

### கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி

## இரு பெண் போராளிகளின் எச்சங்கள் முற்றாக மீட்பு

### துப்பாக்கி ரவை, ஆடைகள் கண்டெடுப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் விடுதலைப் புலிகளின் இரு பெண் போராளிகளின் மனித எச்சங்கள் முற்றாக அகழ் 15

## சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை

### 40 மேலதிக வாக்குகளால் தோற்கடிப்பு



(கொழும்பு)

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை பதவி நீக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை 40 மேலதிக வாக்குகளால் நேற்று பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

பிரேரணைக்கு ஆதரவாக 73 வாக்குகளும் எதிராக 113 வாக்குகளும் 15

## காற்றின் வேகம் அதிகரிக்கும்!

(கொழும்பு)

நாட்டின் கடற்பிராந்தியங்களில் எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்கு காற்றின் வேகமானது சற்று அதிகரித்து காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறி 15

## கனேடிய தூதுவர் யாழ்.பல்கலைக்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான கனேடியத் தூதரகத்தின் அரசியல் மற்றும் வர்த்தக விவகாரங்களுக்கான துணைத் தூதுவர் டானியல் பூட் நேற்று வெள்ளிக் 16

## அதிக பணம் செலவழிக்கும் அமைச்சுக்கள் மீது நடவடிக்கை

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை கடைபிடிக்கும் நிலையில், அதிக செலவு செய்யும் 10 அமைச்சுகளின் செலவினங்களை ஆய்வு செய்ய அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேசியமதிப்பீட்டுக்கொள்கை நடைமுறையாக்க கட்டமைப்பின் வெளி 15

### சிறுமியின் கை அகற்றல் விவகாரம்

## நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்றில் கோரிக்கை

(கொழும்பு)

சிறுமியின் கை அகற்றப்பட்ட விவகாரம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்றில் நேற்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றில்நேற்று உரையாற்றிய விமல் வீரவன்ஸ இந்தக் கோரிக்கையை சுகாதார அமைச்சரிடம் முன்வைத்தார்.

இதற்கு பதில் வழங்கிய சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல, சிறுமியின் கை அகற்றப் 15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## Station Garden
**Hotel and Restaurant**

Chef/
Chef assistant/
Room Boy
தேவை.

(17002)

தொடர்பு
**077 581 8769**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989 ஆம் ஆண்டு பரணி நட்சத்திரம், கிரகபாவம் 22, செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் தொழில் புரியும்(HND IT) மணமகனுக்கு அரச திணைக்களத்தில் பணிபுரியும் மணமகளை எதிர்பார்க்கின்றோம். (மணமகள் வடமராட்சிக்குள் வசிப்பவராக இருத்தல் விரும்பத்தக்கது.)

தொடர்பு **077 864 9878**
Viber **077 634 3103**

(17007)

## வாடகைக்கு தேவை

**கடையுடன் கூடிய வளவோ அல்லது சிறு வீட்டுடன் கூடிய வளவோ வாடகைக்கு தேவை!**

- A9 வீதி மாம்பழம் சந்திக்கும் யாழ் நகரப்பகுதிக்கும் இடையில்
- யாழ் நகரப்பகுதியில்
- பருத்தித்துறை வீதியில் இருந்து நல்லூர் வரையில் உள்ள பகுதியில்
- காங்கேசன்துறை வீதியில் யாழ் நகரப்பகுதியிலிருந்து இரண்டு கிலோமீற்றர் தூரம் வரையில்

தொடர்புகளுக்கு
**077 593 0335**

(17010)

## சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் பணி வெற்றிடம்

வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தினால் நிர்வகிக்கப்படும் பின்வரும் சுற்றுலா தகவல் நிலையங்களுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

**யாழ் புகையிரத சுற்றுலா தகவல் மையம்**
**யாழ் பலாலி சர்வதேச விமான நிலைய சுற்றுலா தகவல் மையம்**
**காங்கேசன்துறை துறைமுக சுற்றுலா தகவல் மையம்**

மேற்காணும் சுற்றுலா தகவல் மையங்களை அணுகும் சுற்றுலா பயணிகளுக்கு வடமாகாணம் தொடர்பான சுற்றுலா விபரங்களை வழங்கக் கூடிய அது தொடர்பான அறிவுடைய மேலதிகமாக ஆங்கிலம் மற்றும் சிங்களம் மொழித் திறனுடையபணியாளர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர். தங்களின் தகைமைச் சான்றிதழ்களுடன் 11.09.2023 ஆம் திகதி நேரில் சமூகம் அளிக்கவும்.

**வட மாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம்**
**இல.15, சிறாம்பியடி ஒழுங்கை,**
**ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C-7217)

**021 222 4550**
**077 734 0026**

## Romania வேலைவாய்ப்பு விசா

**Romania** நாட்டில் **Electrician** மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**Hybrid International hub (pvt) Ltd, Jaffna**
(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்)

(C-7220)

**021 222 1265,076 250 0098**

## காணி விற்பனைக்கு

புத்தூர் நவற்கிரி வீதியை முகப்பாக கொண்டு நவற்கிரியில் 46 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு.

(17000)

**077 706 6487**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திவ்ய மஹால் மண்டபம் யாழ்ப்பாணத்தில் 06.09.2023 அன்று நடைபெற்ற Helping Alliance Social Awarding Ceremony இன்போது பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

**கலாநிதி இராசையா குவேந்திரநாதன்**

அவர்களின் தன்னலமற்ற சமய, சமூக பணிகளிற்காக வட மாகாண ஆளுநர் கௌரவ **P.S.M.CHARLES** அவர்களால்
**'சாதனையாளர் விருது'**
வழங்கி கௌரவிக்கப்பட்டமையை பாராட்டுவதோடு அவர்களின் சேவை மென்மேலும் தொடர நாமும் அவர்களை வாழ்த்துகின்றோம்.

**உரிமையாளரும், ஊழியர்களும்**
**ஐங்கரன் களஞ்சியம் 109, பலாலி வீதி, திருநெல்வேலி**

(16989)

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், அரச உத்தியோகத்தர், வங்கியாளர், ஆசிரியர்கள், தனியார் துறையினர் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்களை உடன் பெற்றுக்கொள்ளலாம்.

**264. ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**021 222 9306,071 999 9306**
**077 138 7596**

(C-7216)

## முல்லைத்தீவு வடக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து) வெளிவாரி ஆட்சேர்ப்பு கோரப்படுகின்றது

மேற்படி விடயம் தொடர்பாக எமது சங்கத்தின் பணி வெற்றிடமாக காணப்படும் கீழ் குறிப்பிடப்படும் பதவிக்கு வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. எனவே இப் பதவிக்கு தகைமை உள்ளவர்கள் இருப்பின் உடன் 2023.09.25 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது என்பதனை அன்புடன் அறியத்தருகின்றேன்.

**பொதுமுகாமையாளர் 101/4 :- 01**
**சம்பள அளவுத்திட்டம் :- 23890-410X450-10X32490**

தகைமைகள்

அ. கூட்டுறவு ஊழியர் 5 ஆவது சம்பளத்திட்டம் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்/
கூட்டுறவு ஊழியர் 6 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக்குறைந்தது 4 ஆண்டுகால அனுபவம்

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம்/ அதற்குச் சமனான தகைமை இத் தகைமையானது கணக்கியல்/ வியாபார புள்ளி விபரவியல்/ வியாபார கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்./
இலங்கை தொழில்நுட்ப கல்லூரியின் கணக்கியல் முகாமைத்துவம்/ வர்த்தகம்/ தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி/

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர்தரப்பத்திர பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில்/ முகாமை நிலைப் பதவியொன்றில்/ ஆகக்குறைந்தது 8 ஆண்டுகால அனுபவம்.

க.பொ.த உயர்தரப்பத்திர பரீட்சையில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமைநிலைப் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 9 ஆண்டுகால அனுபவம்.

**வயதெல்லை 18 - 45 வயதிற்குட்டவர்கள்**
**விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய முடிவுத் திகதி 2023.09.25**
***அனுப்ப வேண்டிய முகவரி (பதிவுத் தபால்)***

**தலைவர்,**
**முல்லைத்தீவு வடக்கு,**
**பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
**வலையன்மடம்,**
**முள்ளிவாய்க்கால்,**
**முல்லைத்தீவு.**

(C-7219)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் உணவகத்தை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 25.09.2023ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கோண்டாவில் மாணவர் விடுதி உணவகம் | கோண்டாவில், யாழ்ப்பாணம். |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆனந்தகுமாரசுவாமி மாணவர் விடுதி உணவகம் | திருநெல்வேலி, யாழ்ப்பாணம். |

மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணமாக ரூபா 2000/= இனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 970000060000268 இற்கும் மீளளிக்கப் படாத கட்டணமாக ரூபா 500/= இனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் : 970000060000276 இற்கும் தனித்தனியாக மக்கள் வங்கியில் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப் படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளைக்கு நேரடியாகவோ தொலைபேசி ஊடாகவோ (தொலைபேசி இல: 021 222 6716) பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
09.09.2023

(C-7218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனல் 4 ஆவணப்படத்துக்கு சர்வதேச விசாரணை அவசியம்

## சரத் பொன்சேகா சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் சனல் 4 வெளியிட்டுள்ள காணொளிக்கு பாராளுமன்ற தெரிவுக் குழு ஊடாக விசாரணைகளை முன்னெடுப்பது பயனற்றது. இதற்கு சர்வதேச விசாரணை அத்தியாவசியமானது என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்று கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் 4 வெளியிட்டுள்ள காணொளி தற்போது பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக்குழு ஊடாக விசாரணைகளை மேற்கொள்வதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

தெரிவுக்குழுக்கள் எவ்வாறு செயற்படும் என்பதை அறிவோம்.

சனல் 4 காணொளியின் குறிப்பிட்ட விடயங்களை பாராளுமன்ற தெரிவுக்குழு ஊடாக விசாரணை செய்வது பயனற்றது.

ஆகவே சர்வதேச மட்டத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

அத்துடன் சனல் 4 காணொளியில் சுரேஷ் சாலே தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது போல இவர் புலனாய்வுப் பிரிவின் பிரதானியாகவும் ராஜபக்ஷக்களின் பாதுகாவலனாகவும் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே சனல் 4 வெளியிட்டுள்ள காணொளி குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும் என சரத்பொன்சேகா மேலும் தெரிவித்தார். (நி)

# அமைச்சுகளின் செலவுகளை மதிப்பாய்வு செய்யத் தீர்மானம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அதிக பணம் செலவழிக்கும் அமைச்சுகளின் செலவுகளை மதிப்பாய்வு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய மதிப்பீட்டுக் கொள்கை கட்டமைப்பை வெளியிடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை தொடர்பான பத்திரமொன்றை இவ்வருட இறுதிக்குள் சமர்ப்பிக்குமாறு வெளிவிவகார அமைச்சரிடம் கேட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையின் அமைப்பில் பாரிய வெற்றிடம் காணப்படுவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (நி)

# நாட்டின் உத்தியோகபூர்வ சொத்தின் மதிப்பு வீழ்ச்சி

## மத்திய வங்கி அறிக்கை

(கொழும்பு)

இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்களின் அளவு கணிசமாகக் குறைந்துள்ளதாக மத்தியவங்கி அறிவித்துள்ளது.


இலங்கை மத்திய வங்கியின் கூற்றுப்படி, நாட்டின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்கள் ஜூலை 2023 இல் 3,765 மில்லியன் அமெரிக்க டொலர்களில் இருந்து ஓகஸ்ட் 2023 இல் 3,598 மில்லியன் டொலர்களாகக் குறைவடைந்துள்ளது. (நி)

# மரண அறிவித்தல்

## ஐயாத்துரை குணரத்தினம்

### (குகானந்தபவன் உணவகம்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14.02.1948 | 07.09.2023 |



அளவெட்டி மேற்கு அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இல 11/12 குளப்பிட்டி ஒழுங்கை (காளிகோவில் வீதி) கொக்குவில் கிழக்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை குணரத்தினம் நேற்று முன்தினம் (07.09.2023) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம்சென்றவர்களான ஐயாத்துரை செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலம்சென்றவர்களான பொன்னம்பலம் மகேஸ்வரியின் அன்பு மருமகனும் வத்சலாதேவி (இந்து) இன் அன்புக் கணவரும் குணாலினி, மிதிலன் (பிரான்ஸ்), இன் அன்புத் தந்தையும் ஜீவதர்சன், தேனுஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலம்சென்றவர்களான பரிபூரணம், கிருஸ்ணசாமி மற்றும் சரஸ்வதி, காலம்சென்ற பாலரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலம்சென்ற லிங்கசாமி, சுப்பிரமணியம் மற்றும் பரிமளகாந்தி, நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ராகல்வியா, யாழமுதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (10.09.2023) அன்று காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முகவரி
இல 11/12 குளப்பிட்டி ஒழுங்கை,
(காளிகோவில் வீதி),
கொக்குவில் கிழக்கு.

தகவல்
[illegible]

(16994)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச அதிபர் வெற்றிக்கிண்ண கரப்பந்தாட்ட போட்டி முடிவுகள்



நடப்பாண்டுக்கான கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ண சுற்றுப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமான நிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கரப்பந்தாட்ட போட்டித்தொடரின் ஆண்களுக்கான அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டிகளும் பெண்கள் அணியினருக்கான போட்டிகளும் முழுமையாக நடைபெற்று நிறைவுற்றிருந்தன.

அந்தவகையில் சிறப்பாக நடைபெற்று முடிந்த கரப்பந்தாட்ட போட்டியில் ஆண்கள் பிரிவில் தெற்கு வலயக் கல்வி அலுவலக அணி சம்பியனாகியது. 2 ஆம் நிலையினை கரைச்சி பிரதேச செயலக அணியும் பெற்றுக்கொண்டது.

பெண்கள் அணி பங்கு பற்றிய கரப்பந்தாட்ட போட்டியில் முதல் நிலையினை தெற்கு வலயக்கல்வி அலுவலக அணி பெற்று சம்பியனாகியது. 2 ஆம் நிலையினை மாவட்டச்செயலக அணி பெற்றுக்கொண்டது .

கிளிநொச்சி மாவட்ட செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இப் போட்டித்தொடரில் மாவட்ட செயலக, பிரதேச செயலக அணிகள் மற்றும் ஏனைய திணைக்கள அணிகள் உள்ளடங்கலாக 19 அணிகள் பங்குபற்றின.

இந் நிகழ்வில் மாவட்டச்செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக கிளைத்தலைவர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் விளையாட்டு பிரிவின் உத்தியோகத்தர்கள், துறை சார்ந்த உத்தியோகத்தர்கள், போட்டியாளர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். (6-316)

## எறிபந்து போட்டி

# தேசிய மட்டத்திற்கு தெரிவான அக்கராயன் மகாவித்தியாலய மாணவர்கள்



எறிபந்து போட்டியில் தேசிய மட்டத்திற்கு தெரிவான மாணவர்கள் கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் மதிப்பளிக்கப்பட்டனர்.

எறிபந்தில் 17 வயது பிரிவினர் மாகாண மட்டத்தில் 1 ஆம் இடத்தினையும் 19 வயது பிரிவினர் மாகாண மட்டத்தில் 2 ஆம் இடத்தினையும் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகி உள்ளனர்.

இம்மாணவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.(6-350)

# ஆசியக்கிண்ண போட்டியை இலங்கையில் நடத்தியதால் வருவாய் இழப்பு

### பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம்

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி கடந்த 30 ஆம் திகதி பாகிஸ்தானில் உள்ள முல்தான் நகரில் தொடங்கியது.

இந்திய போட்டியில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம், ஆப்கானிஸ்தான், நேபாளம் ஆகிய 6 நாடுகள் பங்கேற்றன. பாகிஸ்தானில் விளையாட மறுத்ததால் இந்தியா விளையாடும் போட்டிகள் இலங்கைக்கு மாற்றப்பட்டது.

இதனால் ஆசிய கிண்ண போட்டியின் மொத்தம் 13 போட்டிகளில் 4 ஆட்டங்கள் பாகிஸ்தானில் நடந்துவிட்டது. ஏனைய 9 போட்டிகள் இலங்கைக்கு மாற்றம் செய்யப்பட்டதால் தங்களுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் (பி.சி.பி.) க்கு தெரிவித்துள்ளது.

இதற்கு இழப்பீடு கேட்டு ஆசிய கிரிக்கெட் கவுன்சிலிடம் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் முறையிட்டுள்ளது. இதுகுறித்து பி.சி.பி. அதிகாரப்பூர்வமாக கருத்து தெரிவிக்கவில்லை.

அதே நேரத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய தலைவர் ஜகா அஸ்ரப் ஆசிய கிரிக்கெட் கவுன்சில் (ஏ.சி.சி) தலைவர் ஜெய்ஷாவுக்கு இழப்பீடு கோரிக்கையை கோடிட்டு முறைப்படி கடிதம் எழுதியுள்ளார் தக தகவல் வெளியாகி உள்ளது. (6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2909

நிரோபா




அடேய் என்னடா இது?
நீங்க தானே மொதலாளி
ரசத்துக்குப்
புலியைத் தண்ணில ஊறப்
போடச் சொன்னிங்க.



சாமந்தி

பொண்டாட்டி சமைத்த சாப்பாட்டை "டேஸ்ட்" பார்த்து சாப்பிடறவங்களை விட



வேஸ்ட் ஆகக் கூடாதுன்னு சாப்பிடற கணவர்கள் தான் அதிகம்....

கோபினா

பாம்பு துரத்தினா நேரா ஓடு
புலி துரத்தினா மரத்திலே ஏறு
கரடி துரத்தினா பிணம் போல நடினு
சொல்லிக் கொடுத்த நீங்க...
பொண்டாட்டி துரத்தினா எப்படி தப்பிக்கிறதுன்னு
சொல்லிக் கொடுத்தீங்களா...



தர்சிகன்

வெளிநாட்டு திருமணம்
அழைப்புகள்-500
வந்தவர்கள்-412
பரிசுகள்-407
மிஸ்ஸிங்- இல்லை



உள்ளூர் திருமணம்
அழைப்புகள்-500
வந்தவர்கள்-876
பரிசுகள்-47
மிஸ்ஸிங்- 13 டம்ளர்,
7பிளேட், 7ஜோடி செருப்பு,
2 குத்து விளக்கு,
சாம்பார் கரண்டி மற்றும்
நிஜாம் பாக்குகள்.


தீசன்

உன் பெயரைக் கூட நான் எழுதுவதில்லை...
ஏன் தெரியுமா?
பேனா முனை உன்னை குத்திவிடுமோ என்று...
இப்படிக்கு ஸ்பெல்லிங் தெரியாமல்
சமாளிப்போர் சங்கம்...



மன்னன்

இந்த மருந்தை வெறும்
வயித்துலதான்
சாப்பிடனும்
பனியன்கூட
போட்டிருக்கக்
கூடாதா
டாக்டர்...?
நமக்கு மட்டும்
ஏன் இப்படி பட்ட
ஆளுகளா
வாரானுக...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4,000 கிராம உத்தியோகத்தர்களின் வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை

## இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த

(கொழும்பு)

வெற்றிடமாக உள்ள சுமார் 4 ஆயிரம் கிராம உத்தியோகத்தர் பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

"நாட்டின் பொருளாதார நிலை உள்ளிட்ட பல்வேறு காரணிகளை கருத்தில் கொண்டு பொதுச்சேவையை சமநிலைப்படுத்துவது அவசியம். இது ஒருவரின் நிலைப்பாட்டைப் பொருட்படுத்தாமல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தற்போது, அரச சேவைக்கு ஆட்சேர்ப்பை நிறுத்தும் கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால், கிராம அலுவலர் பணியிடங்கள் கணிசமான அளவில் வெற்றிடமாக உள்ளன. கிராம மட்டத்தில் செயற்படும் கிராம சேவை உத்தியோகத்தர்கள் இல்லாதது முன்னோக்கிச் செல்வதில் சவால்களை ஏற்படுத்தியுள்ளது.

எனவே வெற்றிடமாக உள்ள 4 ஆயிரம் கிராம உத்தியோகத்தர் பதவிகளை நிரப்புவதிலேயே எமது தற்போதைய முயற்சிகள் கவனம் செலுத்துகின்றன.

இந்த விடயம் பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்க தலைமையிலான குழுவிற்கு தீர்மானத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார். (நி)

# அதிக விலையில் அரிசி விற்பனை; 5-50 லட்சம் வரை அபராதம்!

## நுகர்வோர் அதிகாரசபை அதிரடி

(கொழும்பு)

அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் நிறுவனங்களுக்கு 5 முதல் 50 லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

தற்போது சந்தையில் அரிசிக்கு தட்டுப்பாடு நிலவுவதாக வெளியான தகவலை கருத்திற் கொண்டு, நுகர்வோர் அதிகார சபை சோதனை நடவடிக்கைகளை அதிகரித்துள்ளது.

அரிசிக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய, கீரிச் சம்பா ஒரு கிலோகிராம் 260 ரூபாவுக்கும், சம்பா ஒரு கிலோகிராம் 230 ரூபாவுக்கும், நாடு அரிசி ஒரு கிலோகிராம் 220 ரூபாவுக்கும் விற்பனை செய்ய முடியும்.

அத்துடன், ஒரு கிலோ சிவப்பு அரிசியை விற்பனை செய்யக்கூடிய அதிகபட்ச சில்லறை விலை 210 ரூபாவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

"அதற்கு அதிகமான விலையில் அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இதன்படி, அதிகபட்ச சில்லறை விலைக்கு அதிகமாக அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பில் 1977 என்ற அவசர இலக்கத்திற்கு அறிவிக்குமாறு நுகர்வோர் அதிகார சபை பொதுமக்களிடம் கோரியுள்ளது. (நி)




## கைலாச வாகனத்தில் வருகிறான் காண்

தசக்கீரிவன இசை மீட்டும் கைலாச மலையில்
தமிழ்க் கடவுள் நல்லையிலே வருகிறான் காண்
திசையனைத்தும் திருக்கரத்தைக் கூப்பித் தொழ
தெய்வமகன் நல்லையிலே வருகிறான் காண்
இயல், இசை, நாடகமெனும் முத்தமிழாய்
எம் தலைவன் நல்லையிலே வருகிறான் காண்
மயல் கொண்டு தேவியரை மருங்கில் அரவணைத்து
மலைக்கடவுள் நல்லையிலே வருகிறான் காண்
புயலடித்த தேசத்தை காவல் செய்திட
புதுவாழ்வை தமிழருக்கு தர நல்லையிலே வருகிறான் காண்

மதுரகவி

## ஆறுமலர்களில் உதித்தவனே

ஆறுமலர்களில் அவதரித்தோனே- ஆறா
துயர்களை அழித்தருள் புரிவாயே!
பேறாக செல்வம் செல்வாக்குகளை தருவாயே!
பெரும் துயரில் இருந்து நாட்டை காப்பாயே!
மாறான அசுரர்களை அழித்தோனே
மாற்றங்கள் ஏற்பட அருள்வாயே!
நேரான வழியைக் காட்டி நல்லவர்க்கு
அருள் புரிவாய் நல்லூரா!

இராமஜெயபாலன்,
சங்கானை.


# இராசிபலன்

09.09.2023
ஆவணி 23, சனிக்கிழமை
தசமி முன்னிரவு 10.39 மணிவரை


திருவாதிரை முன்னிரவு 6.34 மணிவரை
சுபநேரம் -3.04-4.34 மணிவரை
இராகுகாலம்-9.04-10.34 மணிவரை

சந்திராஷ்டமம்-
அனுசம், கேட்டை.


வளவன்


மேஷம்


ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.


கடகம்


அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், பயணங்களால் அலைச்சல்கள் ஏற்படலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


துலாம்


ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீக் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.


மகரம்


கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், பழைய பிரச்சினைகளைத் தீர்க்க முழுமூச்சுடன் செயற்படுவீர்கள்.


ரிஷபம்


புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.


சிம்மம்

உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.


விருச்சிகம்

பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தேவையற்ற விரயங்களைத் தவிர்ப்பது நல்லது.


கும்பம்

பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.


மிதுனம்

பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், கற்பனை மிகுதியான நாள், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம்


கன்னி

அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், திறமைகள் வெளிப்படும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.


தனுசு

உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரலாம், குடும்பத்தினரிடையே அன்னியோன்யம் அதிகரிக்கும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.


மீனம்

பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், வாகனயோகத்தால் வளம் காணும் நாள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

உடையவன் பாரா வேலை ஒருநாளும் உருப்படாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் அதிகரிக்கும் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலை சூழல், மத்திய பேருந்து நிலையத்தை சூழவுள்ள பகுதி ஆகிய இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களே களவாடப்பட்டுள்ளன.

களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள் உரிமையாளர்களால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் திருட்டு கும்பல்கள் கைது செய்யப்படவில்லை.

குறித்த திருட்டு கும்பல்கள் வலையமைப்பாக செயற்பட்டு வருவதாகவும், திருடப்படும் மோட்டார்சைக்கிள்கள்ள உதிரிபாகங்களாக கழற்றி விற்பனை செய்வதனால், திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்களை மீட்கவோ, திருட்டு கும்பல்களை கைது செய்யவோ பெரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் கடந்த புதன் கிழமை யாழ்.நகர் மத்தியில் உள்ள வங்கி ஒன்றின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை திருடி உருட்டி செல்வது வங்கியில் பொருத்தியிருந்த கண்காணிப்பு கமராவில் பதிவாகியுள்ளது. குறித்த காணொளி காட்சியை அடிப்படையாக கொண்டு யாழ். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(நி-6-33)

## க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் யாழ்.மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவர்கள்



உயிரியல் | கணிதம் | தொழில்நுட்பம் | கலை

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தர 2022 (2023) ஆம் ஆண்டுக்கான பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களான ஆ.வித்தியாசாகர் உயிரியல் பிரிவில் முதல் இடத்தினையும் எஸ். சினேகன் கணிதப்பிரிவில் முதல் இடத்தினையும் ஹாட்லி கல்லூரி மாணவனான எ.திலான் பிரபாகர் பொறியியல் தொழில் நுட்ப பிரிவில் முதல் இடத்தினையும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவியான ஜே. ஆன்டினுஜா வர்த்தகப் பிரிவில் முதல் இடத்தினையும் வரணி மத்திய கல்லூரி மாணவியான ஆர். சுவர்க்காகலைப் பிரிவில் முதல் இடத்தினை பெற்றுள்ளார்.

மேற்குறித்த மாணவர்கள் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-60)


## சண்டிலிப்பாய் பகுதியில் திருடர்கள் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, சண்டிலிப்பாய் பகுதியில் உள்ள வீட்டில் நேற்று முன்தினம் இரவு திருடர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர்.

இந்நிலையில் அந்த வீட்டில் இருந்த 10ஆயிரம் ரூபா பணம், தோடு, மோதிரம் மற்றும் காஸ் சிலிண்டர் என்பன களவாடப்பட்டுள்ளன. அந்த வீட்டின் சமையலறையானது வீட்டிற்கு 20 மீற்றர்கள் தள்ளி அமைந்துள்ளது. சமையல் அறையில் வைக்கப்பட்டிருந்த மேற்படி பணம் மற்றும் பொருட்களே இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-104)



நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தின் 19 ஆவது நாள் சூர்யோற்சவம், திருவிழாவில் ஏழு குதிரைகள் பூட்டிய இரதத்தில் எழுந்தருளிய சூரிய பகவான், உள் வீதி, வெளி வீதியுலா வரும் காட்சி நேற்று இடம் பெற்றது.

(படம்- சிவசாந்தன், கஜிந்தன்)

## மூன்றில் ஒரு தாய்மார்கள் குருதிச்சோகையால் பாதிப்பு

### வைத்தியகலாநிதி கேதீஸ்வரன் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

**இலங்கையில் மூன்றில் ஒரு தாய்மார்கள் குருதிச் சோகை நோயினால் பாதிப்படைகின்றனர் என யாழ்ப்பாண மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



அண்மையில் கொடிகாமத்தில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்

எமது நாட்டில் தாய்-சேய் மரண விகிதம் குறைவடைந்துள்ள போதிலும், போசாக்கு நிலைமையை எடுத்துக் கொண்டால் தாய் மற்றும் சேய் போசாக்கு விகிதம் பன்மடங்கு மேம்படுத்தப்பட வேண்டும்

எமது நாட்டில் கர்ப்பிணி தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்கள் மத்தியில் குருதிச்சோகை நோய் காணப்படுகிறது.

மூன்றில் ஒரு தாய்மார்கள் குருதிச் சோகையால் பாதிக்கப்படுகின்றனர்.

குருதிச்சோகையால் பாதிப்படைந்த பெண்கள் பெற்றுக்கொள்ளும் குழந்தைகள் போசாக்கு குறைந்தவர்களாகவும், உளவிருத்தி குறைந்தவர்களாகவும் இருப்பார்கள்.

எனவே போசாக்கு நிலைமையை மேம்படுத்த வேண்டியது மிக அவசியம் எனத் தெரிவித்தார்.(நி-6-30)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யா/ சோமாஸ்கந்த கல்லூரியின் நிறுவுநர் தின மும் பரிசளிப்பு விழாவும், நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் சின்னத்தம்பி திரிகரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தி னராக கல்லூரியின் பழைய மாணவரும் ஓய்வு நிலை மேலதிக நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகமும் காலநிலைக்கு இசைவான நீர்ப்பாசன விவசாயத்திட்டம் வட மத்திய மாகாண சிரேஷ்ட பொறியியலாளருமான எந்திரி. குமாரவேலு சிவபாலசுந்தரம் கலந்து கொள்ளவுள்ளார். (நி)

## நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். இளங்கலைஞர் மன்றத்தால் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தப்படும் தெய்வீக இசை அரங்கு நிகழ்வு நாளை 10 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ். இராமநாதன் அரங்காற்றுகை கட்புலக் கலைகள் பீடத்தினால் குழு இசை நடத்தப்படவுள்ளது.

தி.அனிற்றா, சு.சயாதினி, பெ.சரண்யா, நா.தர்சிகாவுடன் ஸ்ரீ. மிலக்ஷா, சு. ரூபிகா, வயலின்-கே.வேலதீபன், மிருதங்கம்-க.தஷானன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து 7.15 மணிக்கு இடம் பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு- பொன்.ஸ்ரீ வாமதேவன், வயலின்- கா.குகபரன், மிருதங்கம்- அ.அமிர்தலோஜன், கஞ்சிரா-மு. சுலக்சன், முகர்சிங்-நி.மோகனதர்சன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி)

## தெய்வீகத் திருக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் தெய்வீகத் திருக்கூட்டம் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4.15 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் மற்றும் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் திருமுன்னிலையில் யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறைத் தலைவர் கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக சாவகச்சேரி பிரதேச செயலாளர் உஷா சுபலிங்கம், சிறப்பு அதிதியாக யா/ இராமநாதன் கல்லூரி ஓய்வு பெற்ற அதிபர் திருமதி. வைகுந்தம் கணேசபிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சா செய்கை அனுமதி; அடுத்த வாரம் வர்த்தமானி

(கொழும்பு)

மருத்துவ குணம் கொண்ட கஞ்சா பயிர்ச்செய்கையை இலங்கையில் அனுமதியளிக்கும் வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரம் வெளியிடப்படும் என உள்ளூர் மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதற்கான ஆயுர்வேத சட்ட திருத்தம் கடந்த 5 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, அதற்கான அறிவிப்பின் மூலம் அதன் சட்ட அமுலாக்கம் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)


# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 14.02.1948

மறைவு 07.09.2023

அமரர்.

## ஐயாத்துரை குணரத்தினம்

(குகானந்தபவன் உணவகம்)



அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-7215)

அளவெட்டி தெற்கு,
அடுவம்பற்று.

தகவல்
த.திருவருட்செல்வம்.


# உலக முதலுதவி தினம் இன்று

உலக முதலுதவி தினம் செப்டெம்பர் மாதம் 2 ஆவது சனிக்கிழமை ஆண்டுதோறும் உலக நாடுகளில் அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்த தினத்தை இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் நாடு முழுவதும் அனுஷ்டித்து வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை சங்கங்களின் சம்மேளனம் ஒவ்வொரு கருப்பொருளை மையமாக வைத்து அனுஷ்டிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டும் இலத்திரனியல் உலகத்தில் முதலுதவி (First Aid In The Digital World) என்னும் கருப்பொருளை கொண்டு அனுஷ்டிக்கப்படுகின்றது. முதலுதவியானது முக்கியமானதாக கருதப்படுகின்றது. இயற்கை மற்றும் செயற்கை அழிவுகளால் பாதிக்கப்படும் மனித உயிர் இழப்புக்கள் ஏற்படுவதை தடுப்பதற்கு சரியான முதலுதவி தேவையாக உள்ளதனால் இந்த முதலுதவி பயிற்சியினை சகலரும் பெற்றுக் கொள்வதும் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.

இந்த முதலுதவியானது எங்கு ஆரம்பமானதெனக் கூறினால் செஞ்சிலுவை சங்கஸ்தாபகர் "Iean Henri Dunant" 1859 ஆண்டு சொல்பரினோவில் நடந்த யுத்தத்தின் போது பல்லாயிரக்கணக்கான படையினருக்கு அந்த ஊர் மக்களின் உதவியுடன் முதலுதவி சேவையினை வழங்கியது குறிப்பிடத்தக்கது. இதன் பின்னர் இவர் எழுதிய "சொல்பரினோவில் மீள் நினைவுகள்" என்னும் புத்தகத்தில் பின்வரும் கருத்தினை குறிப்பிட்டுள்ளார்.

1. உலக நாடுகள் எல்லாவற்றிலும் முதலுதவி தொண்டர்கள் இணைக்கப்பட வேண்டும்.

2. உலக நாடுகள் முதலுதவி தொண்டர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும். அன்றைய காலம் தொட்டு இன்று வரை சகல நாடுகளும் முதலுதவிக்கு சகலரும் ஆதரவு கொடுத்து வருகினறனர்.

### முதலுதவி என்றால் என்ன?

திடீர் விபத்து, அனர்த்தம், திடீர் நோயினால் பாதிக்கப்பட்டவருக்கு அந்த இடத்திலிருந்து வைத்திய உதவி கிடைக்கும் வரையில் சூழலிலிருந்து கிடைக்கக்கூடிய பொருத்தமான பொருட்களைக் கொண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைக்கமைவாக பயிற்றப்பட்ட ஒரு முதலுதவியாளரினால் பெறப்படும் உதவி முதலுதவி ஆகும்.

### நோக்கம்

உயிரைக் காத்தல், பாதிப்பின் தீவிரத்தன்மையை குறைத்தல், குணமடைய உதவி செய்தல். ஒரு சம்பவ இடத்தில் முதலுதவியை மேற்கொள்ளும் போது பின்வரும் விடயங்களை செயற்படுத்தினால் பாதிப்புக்களை குறைக்கலாம்.

1. **சம்பவ இடத்தில் மதிப்பீடு:** முதலுதவி செய்யும் முதலுதவியாளர் சூழலில் இருப்பவரின் பாதுகாப்பு முக்கியமானது. பாதுகாப்பற்ற பிரதேசத் தில் முதலுதவியாளர் மற்றும் ஏனையோர் செல்லக் கூடாது.

2. **சம்பவ இடப்பாதுகாப்பு:** பாதுகாப்பற்ற இடமாயின் சம்பந்தப்பட்ட இடத்திற்கு (பொலிஸ், தீயணைப்பு படை) பின்வருவோருக்கு தகவலை கொடுத்து வரவழைத்தல் வேண்டும்.

3. **அவசர உதவி :** இதய சுவாசம் தடைப்பட்டவர், அதிக குருதிப்பெருக்கு ஏற்பட்டவர், சுயநினைவு அற்றவர் உடனடி முதலுதவியும் மருத்துவ உதவியும் தேவைப்பட்டவராவர்.

4. **உதவி கோரல்:** பொலிஸ், அம்புலன்ஸ், தீயணைப்பு படை தேவையானவற்றை உடனடியாக சரியான விபரங்களை கொடுத்து உரிய முறையில் பெற்றுக் கொள்ளல் (அம்புலன்ஸ் இல.1990)

5. **சம்பவத்தின் பின்னரான நிலை:** தொடர்ந்து நிகழ் விடம் பாதுகாப்பானதாக இருத்தல். சம்பவ இடம் பாதுகாப்பானதாக வைத்திருத்தல்.

### சில முதலுதவி நுணுக்கங்கள்

#### மயக்கம்

மயக்கம் ஏற்பட்டிருப்பின் பாதிக்கப்பட்டவரை படுக்க வைத்து அவரது கால்களை இதய மட்டத்திற்கேற்ப உயர்த்தவும். இறுக்கமான ஆடைகளை அகற்றவும்.

#### சுயநினைவு அற்றவருக்கான முதலுதவி

சம்பவ இடத்தில் முதலுதவியாளர், சூழல் பாதுகாப்புகள் முக்கியமானவை. பின்னர் பாதிக்கப்பட்டவரின் தோள் பட்டைக்கு நேராக இருந்து தோள்களை தட்டி துலங்ளை ஏற்படுத்தல். எதுவும் பேசாதிருந்தால் தலையை சாய்த்து தாடையை உயர்த்தி சுவாசத்தை பரிசோதித்தல், பார்த்தல். கேட்டல் உணர்தல் மூலம் பாதிக்கப்பட்டவரின் மூக்குக்கு நேரே முதலுதவியாளரின் காதை வைத்து 10 செக்கன்களுக்கு நெஞ்சுப்பகுதியை அவதானிக்க வேண்டும்.

#### மயக்கம்

சுவாசம் இருக்குமாயின் மயக்க மீள்நிலைக்கு சாய்க்க வேண்டும். சுவாசம் இல்லாவிடின் உடனடியாக இதய சுவாச மீள் உயிர்ப்பினை ஏற்படுத்த வேண்டும். 30 தரம் மார்பழுத்தம், 2 தரம் சுவாசம் என்ற நிலையில் தொடர்ந்து இதய சுவாசம் மீள் வரையிலும் அல்லது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வரையிலும் செயற்படுத்த வேண்டும்.

கூடுதலான குருதி வெளியேறும் சந்தர்ப்பத்தில் மடிக்கப்பட்ட துணியினை காயத்தின் மேலே நேரடி அழுத்தம் கொடுத்து பாதிக்கப்பட்ட பகுதியை இதய மட்டத்திற்கு மேல் உயர்த்தி பாதிக்கப்பட்ட வரை படுக்க அல்லது இருக்க வைக்கவும். அணியத்தினை இன்னொரு துணியினால் இறுக்க கட்டிக்கொண்டு பாதிக்கப்பட்ட பகுதியில் ஏனைய பகுதிக்கான குருதியை பரிசோதனை செய்தல்.



#### என்பு முறிவுக்கான முதலுதவி

விலா எலும்பு, கால் முறிவு ஏற்படும்சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்டவரை அசையாதிருக்குமாறு அறிவுறுத்தவும். நோயாளியினை ஆசுவாசப்படுத்துதல். முறிவு ஏற்பட்ட இடத்தினை அசையாமல் வைத்து நோயாளியின் வசதிக்கேற்ப இருக்க அல்லது படுக்க வையுங்கள். மென்மையான துணிகளை ஆதாரமாகவும் முக்கோண கட்டுத் துணியினால் கட்டி அசை யாது வைக்கவும். உணவு மற் றும் பானங்கள் கொடுக்கவும். அம்புலன்ஸ் வாகனத்தில் ஏற்றி வைத்திய சாலைக்கு கொண்டு செல்லவும்.

#### எரிகாயங்களுக்கான முதலுதவி

எரிச்சல் மற்றும் வலி குறையும் வரையில் பாதிக்கப்பட்ட பகுதியினை ஓடும் நீரில் கழுவுதல் வேண்டும். ஒட்டி இருக்காத ஆபரணங்களை கழற்றவும். ஒட்டி இருக்காத ஆடைகளை வெட்டி அகற்றவும்.

தோலில் ஒட்டாத, மெல்லிய பொலித்தீன் கொண்டு காயத்தினை மூடவும். நீர்க் கொப்பளங்களை உடைத்தலைத் தவிர்க்கவும். காயத்தின் மீது எதுவும் போடுதல் கூடாது. உடனடியாக வைத்திய உதவியை நாடவும்.

#### முதலுதவி சேவை

முதலுதவி சேவையில் இருப்போர் குறைந்தது அடிப்படை முதலுதவி பயிற்சியாவது பெற்றிருத்தல் வேண்டும். எப்படியான பாதிப்புக்குள்ளான வரையும் சுலபமாக கையாளக் கூடியவராக இருக்க வேண்டும்.

சேவையில் இருக்கும் போது முதலுதவிப்பெட்டி திறம்பட இருக்க வேண்டும். முதலுதவிப்பெட்டி பல அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும் காணக் கூடியதாக உள்ளது. இந்தப் பெட்டிகளில் உள்ள இலச்சினைகள் பச்சை நிற பின்னணியில் வெள்ளை சிலுவையை உடையதாக இருத்தல் வேண்டும்.

முதலுதவிப் பெட்டி அந்தந்த நிறுவனாங் களுக்கு ஏற்ற அளவில் பெட் டிகள் அமைய வேண்டும். பெட்டியில் உள்ள பொருட்கள் கூடிய அள்வில் அங்குள்ளவர்களால் பாவிக்கத் தெரிந்த அளவில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

பெட்டியிலுள்ள பொருட்களின் முடிவுத் திகதியின் பின் புதிய பொருட்கள் மாற்றப்பட வேண்டும். இந்தப் பொருட்கள் மாற்றத்தின் போது ஒரு முதலுதவிப் போதனாசிரியரின் ஆலோசனை இன்றியமையாதது.

தற்கால பொருளாதார நெருக்கடி காரணமாகவும் மருந்துப் பொருட்களின் தட் டுப்பாடு காரணமாகவும் பாதிக் கப்பட்டவரின் பாதிப்புக்கள் கூடுவதற்கு சந்தர்ப்பம் உள்ளது.

எனவே சரியான முதலுதவி பயின்று பாதிப்பின் தீவிரத்தன்மையை குறைத்துக்கொள்ளலாம். முதலுதவியாளரின் உதவியை பெற்று மருத்துவ தேவையை பெற்றுக் கொள்ளலாம்.

எனவே எல்லோரும் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்டவரை உரிய முறையில் முதலுதவி வழங்கி அம்புலன்ஸ் வாகனத்தில் ஏற்றி வைத்திய உதவியை பெற வேண்டும்.

எனவே இலத்திரனியல் உலகின் முதலுதவி என்ற கோட்பாட்டிற்கமைய இந்த உயிர் காக்கும் பணியினை பயிற்சி பெற்று நாம் யாவரும் திறம்பட செய்தல் வேண்டும்.

ந.இலங்கேஸ்வரன்,
முதலுதவி போதனாசிரியர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ் கிளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகநூல் தரிசனம் 195

# விட்டுக்கொடுத்து போதல்

விமலா ஜில்லுன்னு ஒரு கிளாஸ் தண்ணி அப்புறம், சூடா ஒரு கப் காபி கொடு என்றான் கதிரேசன். தண்ணீரையும் காபியையும் கொண்டு வந்து வைத்தாள் விமலா. விமலா அப்பா ஏன் கொல்லைப் புறத்தில் உட்கார்ந்து இருக்கார்? ம்.. நீங்களே கேளுங்க அந்த கண்றாவியை.

காபியை ஒரே மடக்கில் குடித்தவன், தந்தையின் அருகில் வந்தான். அவரது தோளை ஆதரவாக பற்றினான். அப்பா எழுந்திரிச்சு உள்ளே வாங்க. தந்தையின் கையை மென்மையாக பிடித்து அழைத்து வந்து, சோபாவில் அமர்த்தினான்.

ஏம்பா என்னமோ மாதிரி இருக்கீங்க? அவர் சொல்லத் தயங்கினார். எதுவா இருந்தாலும் சொல்லுங்கப்பா. அவர் சொல்ல மாட்டார். நானே சொல்றேன் கரன்ட் பில்லும் ஸ்கூல் பீசும் கட்டிட்டு வாங்கன்னு குடுத்த, பத்தாயிரம் ரூபாயை தொலைச்சுட்டு வந்து நிக்கிறார். கேட்டா, எங்கே வைச்சு தொலைச்சேன்னே தெரியலைமான்னு சொல்றார். இந்த அளவுக்கு அஜாக்கிரதையும் பொறுப்பில்லாமையுமா ஒருத்தர் இருப்பாங்க. இவர், வங்கில வேற கேஷியரா இருந்தாரு. எப்படித்தான் இத்தனை காலம் கேஷியர் வேலை பார்த்தார்னே தெரியலை. விமலா... நீ கொஞ்சம் பேசாம இரு. நான் தான் விசாரிச்சிட்டு இருக்கிறேன்ல்ல. எங்க வைச்சுப்பா தொலைஞ்சிச்சு? தந்தையிடம் கேட்டான் கதிரேசன்.

அதுதாம்பா எனக்கும் புரியலை. விமலா கிட்டே பணத்தை வாங்கிட்டு, ஈ.பி ஆபீசுக்கு போயிட்டு இருக்கும் போது, நம்ம ரிட்டையர்டு போஸ்ட் மாஸ்டர் சேஷாத்ரியை வழியில பார்த்தேன். நானும் அவருமா பேசிட்டே நடந்து ஆப்பீஸ்க்கு போனோம். அங்க ஒரே கூட்டமா இருந்தது. கூட்டம் குறையட்டும்ன்னு, நானும், அவருமா தாகமா இருக்குன்னு, ஆளுக்கு ஒரு இளநீரை குடிச்சிட்டு, நானே காசைக் குடுக்கலாம்ன்னு திரும்பிப் பார்த்தா, பையைக் காணோம். கடைசியில, இளநீருக்கு அவர் தான் காசை கொடுத்தார். அந்த இளநீர்க்காரன் எடுத்திருப்பானோ!.

இல்லப்பா. பின்னால, இருந்த வேற யாரோ தான், எனக்குத் தெரியாம எடுத்திருக்காங்க. விமலா குறுக்கிட்டாள். பணப் பையை யாராச்சும் பின்னால வைப்பாங்களா? சுத்த கோமாளித்தனமா இருக்கு. சொந்தமா சம்பாத்தியம் இருந்தாத்தானே, காசோட அருமை தெரியும். என்னோட புருஷன் சம்பாதித்ததை, வேற எவனோ திங்கணும்ன்னு விதி.

இந்த ஒரு தடவை தானம்மா இப்படி நடந்திச்சு. அங்க, என்னோட வேலை பார்த்தவங்க நின்னுட்டு இருந்தாங்க. இங்க, என்னோட சிநேகிதனை பார்த்தேன்னு சொல்லி, நாள் முழுக்க வெட்டிப் பேச்சு பேசிட்டு நிற்கக் கூடாது, என்று பொரிந்து தள்ளினாள் விமலா. விமலா... கொஞ்சம் மரியாதை கொடுத்து பேசு. என்ன இருந்தாலும், அவர் என்னோட அப்பா. ஆமா, நீங்க தான் மெச்சிக்கணும். இவர் உருப்படியா பண்ணிட்டு இருந்தது, ரேஷன்ல பொருள் வாங்கிறதும் கரன்ட் பில், ஸ்கூல் பீஸ் கட்டறதும் தான். இனி, இந்த ஒரு காரணத்தை வெச்சு, இந்த வேலையிலிருந்தும் ஜகா வாங்கிக்கலாம்ல்ல.

கதிரேசன் குறுக்கிட்டான். "விடு விமலா... அவருக்கு முடியலைன்னா, நானோ, நீயோ போயி கட்டிட்டு வந்திடலாம். நேரத்திற்கு சமைச்சுப் போடத்தான் நான் இருக்கேன்ல. ஏய் இப்ப என்ன பண்ணனும்ங்கறாய். எரிச்சலுடனேயே கேட்டான் கதிரேசன். "எம்மேல ஏன் எரிஞ்சு விழுறீங்க? கொஞ்ச நாள், உங்க தங்கச்சி வீட்டில கொண்டு போய் விடுங்க. அப்பத்தான் நம்ம வீட்டோட அருமை தெரியும்.

என்ன மாப்பிள்ளே ஏதோ,சூடான விவாதம் போல தெரியுது. சிவ பூஜைல கரடி நுழைஞ்சிருச்சோ கேட்டபடியே வீட்டினுள் நுழைந்தார், விமலாவின் தந்தை சிவராமன். இந்தாம்மா பையில பழங்களும் சிப்சும் இருக்கு. குழந்தைகள் வந்தா குடு. மொதல்ல, இதை போய் உள்ளே வைச்சிட்டு வா. பையை கிச்சனில் வைத்து விட்டு, தந்தைக்கு லெமன் ஜூஸ் எடுத்து வந்தாள் விமலா. அப்பா இந்தாங்க, ஜில்லுன்னு குடிங்க. அதை இப்படி வைச்சிட்டு இந்தப் பக்கம் வாம்மா.

தந்தையின் அருகில் வந்தாள் விமலா. என்னப்பா? பளார் என்று, தன் மகளின் கன்னத்தில் அறைந்தார் சிவராமன். விம்மி அழுது கொண்டே, என்னப்பா? என்றாள் விமலா. கதிரேசனும் இராமநாதனும் அதிர்ச்சியுடன் சிவராமனையே பார்த்தனர். நான் வந்து இருபது நிமிஷம் ஆச்சு மாப்பிள்ளே. பொண்டாட்டி பேச்சுக்கு மதிப்பு குடுக்க வேண்டியது தான். தப்பில்ல.. ஆனா, எந்த காலத்திலேயும், எந்த நேரத்திலேயும் தன்னைப் பெத்தவங்களையும் விட்டுக் குடுக்கக் கூடாது.

குடும்பத்தில் முதல் மரியாதை அவங்களுக்குத் தான். அதுவும் அவங்க மனைவிய இழந்தவங்க. அதுக்கப்புறம் தான் பொண்டாட்டி, குழந்தைகள். நீங்களோ, சம்பந்தியோ அவளை அடிச்சா, புருஷன் வீட்டில எல்லாருமா சேர்ந்து, என்னை கொடுமை பண்ணறாங்கன்னு இவ பொலிஸ்ல கம்ப்ளைண்ட் குடுக்கலாம். ஆனா, நானே ரெண்டு சாத்து சாத்தினா, எவன் கேட்கப் போறான்?

நான் வர்றேன் மாப்பிள்ளே, வர்றேன் சம்பந்தி. காத்தால நடக்கும் போது, அப்படியே நம்ம வீட்டுக்கும் அடிக்கடி வாங்க. கொஞ்ச நேரம் ஜாலியா பேசிட்டு இருக்கலாம் என்று கூறியபடியே, நடையைக் கட்டினார் சிவராமன்.

# திட்டமிட்டு புறக்கணிக்கப்படும் தமிழ் மாணவர்கள் – சிறீதரன் எம்.பி சாடல்

(கொழும்பு)

**நீண்ட காலமாக தாதிய வெற்றிடங்களுக்கு சிங்கள மாணவர்கள் மட்டுமே சட்டத் திருத்தங்களுடன் உள்வாங்கப்படுவதுடன் தமிழ் மாணவர்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுகின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பாராளுமன்றில் குற்றம் சாட்டியுள்ளார்.**



நேற்று பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நிலவும் சுகாதாரத் துறையின் பிரச்சினைகள், தற்கொலைகள் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களை புள்ளி விபரங்களுடன் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஒரு நாட்டினுடைய மக்களின் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் சுகாதாரம் அடிப்படை மனித உரிமையாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

வெளிநாடுகளில் அடிப்படை மனித உரிமையாகக் காணப்படும் சுகாதாரம் இலங்கையில் வியாபாரப் பொருளாக மாற்றப்பட்டுள்ளது.

அமைச்சருக்கும் அவரோடு இணைந்தவர்களுக்கும் வருமானம் தருகின்ற துறையாகக் காணப்படுவதோடு சில வைத்திய சங்கங்களும் தங்களுடைய முகவர்களூடாக மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்து விற்பனை செய்யும் முகவர்களாகச் செயற்படுகின்றார்களே தவிர நீதியான சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

ஒட்டுமொத்தமாக பகல்கொள்ளையடிக்கும் மாபியாக்களின் மையப் பிரதேசமாக சுகாதாரத்துறை மாறியுள்ளது. பல் கல்லைக்கழகங்களில் இருந்து வெளியேறும் வைத்தியர்கள் மற்றும் தாதியர்களில் எத்தனை பேர் இங்கு பணி புரிகிறார்கள் என்ற கேள்வி எழுகிறது.

நீண்டகாலமாக சிங்கள மாணவர்கள் மட்டுமே சட்டத் திருத்தங்களோடு உள்வாங்கப்படுவதுடன் தமிழ்த் தாதியர்கள் திட்டமிட்டுத் தவிர்க்கப்படுகின்றனர்.

இதனால் வடகிழக்கில் அநேகமான வைத்தியசாலைகளில் தாதியர்களற்ற துப்பாக்கிய நிலை காணப்படுகின்றன.

கிளிநொச்சி வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவிற்கு நாளாந்தம் 420 இற்கு மேற்பட்டவர்களும் சிகிச்சைகளுக்காக ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களும் வருகை தருகின்றனர். ஆனால் அங்கு தொழில்நுட்ப சாதனங்களின் பற்றாக்குறையும் வைத்தியர்களின் பற்றாக்குறையும் நிலவுகின்றது.

இதேவேளை மன்னர்களின் ஓலைச் சுவடிகளை ஆதாரமாக வைத்து இலங்கையில் ஆயுர்வேதம் என்பதை அறிமுகம் செய்த யாழ்ப்பாணத்தில் காணப்படும் நூறு வருடம் பழைமை வாய்ந்த லங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி தற்சமயம் மூடப்படும் நிலையிலுள்ளது. பொறுப்பு வாய்ந்த சுகாதார அமைச்சர் நடைபெறும் விடயங்களுக்குப் பதிலளிக்க முடியாமல் காணப்படுவதால் அவர் அமைச்சுப் பதவியிலிருந்து அகற்றப்படவேண்டியவர் எனத் தெரிவித்தார்.(நி-5)

# வெளிநாடு செல்லும் வைத்தியர்களால் மூடும் நிலையில் வைத்தியசாலைகள்

## விமல் வீரவன்ச எம்.பி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் வேலைவாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் போது ஆதார மற்றும் கிராமிய வைத்தியசாலைகளை மூட வேண்டிய நிலை ஏற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 8 வயதுடைய சிறுமி காய்ச்சல் காரணமாக தனியார் வைத்தியசாலையிலிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் சென்ற போது சிறுமியின் கையில் ஒரு பாகம் அகற்றப்பட்டுள்ளது.

அதற்கான காரணங்களைப் பெற்றோர் வினாவிய போதும் சரியான பதில் வழங்கப்படவில்லை.

கவனயீனமே இதற்கான காரணமாகவிருந்தால் சுகாதார அமைச்சர் தகுந்த விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

அரச வைத்தியசாலைகளில் பணியாற்றுகின்ற வைத்தியர்கள், தாதியர்களில் 5000 பேர் வரை வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புப் பெறுவதற்கான பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

இதனால் ஆதார வைத்தியசாலைகள் உட்பட கிராமிய வைத்தியசாலைகள் மூடுவிழாக் காணவுள்ளதுடன் ஏனையவர்களுக்கு மன உளைச்சல் ஏற்படும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை விமல் வீரவன்சவின் கருத்துக்கு பதிலளித்த சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்கல, யாழ்ப்பாணத்தில் 8 வயதுச் சிறுமியின் கையின் ஒரு பகுதி அகற்றப்பட்டமை தொடர்பில் விரிவான அறிக்கைகள் கிடைத்துள்ளன.

இது மருந்துகளால் ஏற்பட்ட பிரச்சினையல்ல. எனவே இவை தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொண்ட பின்னரே சபைக்கு கருத்துக்களை முன்வைக்கமுடியும் எனத் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்வானை உலுக்கும் 'ஹக்கூய்' சூறாவளி

## 5 ஆயிரத்து 740 கோடி பெறுமதி பொருட்சேதம்

- 294,100 பேர் வெளியேற்றம்
- 10,000 ஹெக்ரேயர் விளைநிலங்கள் நாசம்
- 2,540 வீடுகள் சேதம்
- வெள்ளத்திற்குள் மூழ்கிய 100 இற்கும் மேற்பட்ட கார்கள்

(தாய்வான்)

**தாய்வானை உலுக்கி எடுத்த ஹக்கூய் சூறாவளிப் புயல் சீனாவின் கடலோர மாகாணங்களை துவம்சம் செய்து வருகிறது. இதனால் பல ஆயிரம் கோடி ரூபாய் இழப்பை அந்த மாகாணங்கள் சந்தித்துள்ளன.**



4 நாட்களுக்கு முன்பு தாய்வானில் கரையை கடந்த ஹக்கூய் சூறாவளிப் புயல், சீனாவின் தென் கிழக்கில் அமைந்துள்ள ஃபுஜியான் மற்றும் கவுகாங்டாக் மாகாணங்களில் கோர தாண்டவம் ஆடி வருகிறது.

புயல் காரணமாக கன மழை தொடர்வதால் தார் சாலைகள் தற்போது காட்டாறுகளாக மாறியுள்ளன.

சாலைகளில் ஓடும் வெள்ளத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கார்கள் மூழ்கியுள்ளன. ஆயிரக்கணக்கான வீடுகளில் மழை, வெள்ளம் புகுந்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களை படகுகள் மூலம் தீயணைப்பு வீரர்கள் மீட்டு வருகின்றனர். பல இடங்களில் பெரும் மண் சரிவு ஏற்பட்டுள்ளதால் ஆயிரக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்து விட்டன.

ஃபுஜியான் மற்றும் கவுகாங்டாக் மாகாணங்களில் உள்ள 2 லட்சத்து 94 ஆயிரத்து 100 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சுமார் 10 ஆயிரம் ஹெக்ரேயர் விளைநிலங்களில் உள்ள பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. 2,540 வீடுகள் சேதமடைந்து விட்டன.

சுமார் 5 ஆயிரத்து 740 கோடி ரூபாய் பொருட் சேதம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த வாரம் இறுதி வரை கனமழை தொடரும் என்றும் தென்கிழக்கில் உள்ள பிற மாகாணங்களையும் புயல் பாதிக்கும் எனவும் சீன வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. (நி-5)

# ஜி20 உச்சி மாநாடு இன்று

## உச்சக்கட்ட பாதுகாப்பில் புதுடில்லி

(டில்லி)

ஜி20 18 ஆவது உச்சி மாநாடு, இந்திய தலைநகர் புதுடில்லியில் பிரகதி மைதானத்தில் உள்ள பாரத் மண்டப மாநாட்டு மையத்தில் இன்று மற்றும் நாளைய தினம் நடைபெறவுள்ளது.




இதில் பங்கேற்க பெரும்பாலான உறுப்பினர் நாடுகளின் தலைவர்களும் ஜனாதிபதிகளும் புதுடில்லிக்கு வந்த வண்ணம் உள்ளனர்.

தலைவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பிலும் விருந்தோம்பலிலும் எந்தவித குறைபாடுகள் இன்றி இரு நாட்களிலும் மாநாடு நடைபெற அரசு தரப்பில் மும்முரமாக வேலைகள் நடைபெற்று வருகிறது. பிரகதி மைதானத்தை சுற்றிலும் உள்ள பகுதிகளில் காவல் மிகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுமார் 1 லட்சத்து 30 ஆயிரம் காவல்துறை பணியாளர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். வான்வெளி பாதுகாப்பைப் பலப்படுத்தும் நோக்கில், இந்திய விமானப்படை பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளது. ஆளில்லா விமானங்கள் முதல் பட்டங்கள் கூட பறக்க தடை செய்யப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை முதல் செப்டெம்பர் 10 வரை புதுடில்லி முழுவதும் கட்டுப்பாட்டு பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட வாகனங்கள், அவசரகால வாகனங்கள், மற்றும் விமான நிலையம், பழைய டில்லி ரயில்வே நிலையம் மற்றும் புதுடில்லி ரயில்வே நிலையம் செல்லும் வாகனங்கள் ஆகியவை மட்டுமே அடையாளங்கள் உறுதியான பயணிகளுடன் செல்ல அனுமதிக்கப்படும்.

நேற்று முன்தினம் கோகுலாஷ்டமி விடுமுறையுடன், தொடர்ந்து நாளை வரை தொடர்ந்து நான்கு நாட்களுக்கு புதுடில்லியில் அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

புதுடில்லியில் ஜி20 உச்சி மாநாடு நடத்தப்படுவதை பெருமையாக கொள்வதால், இத்தனை கட்டுப்பாடுகளையும் டில்லி மாநகர மக்கள் வரவேற்கின்றனர். (நி-5)

# வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்ட ஜப்பானின் "ஸ்லிம்" விண்கலம்

(டோக்கியோ)

ஜப்பான்விண்வெளிஆய்வு மையம் நிலவை ஆய்வு செய்வதற்கான "ஸ்லிம்" என்ற விண்கலத்தை ஏவியுள்ளது.

ஏற்கனவே இந்த விண்கலத்தை எச்.2-ஏ என்ற ராக்கெட் மூலம் விண்ணில் ஏவ திட்டமிடப்பட்டது. ஆனால் மோசமான வானிலை உள்ளிட்ட காரணங்களால் ராக்கெட் ஏவுதல் 3 முறை ஒத்தி வைக்கப்பட்டது.

அதன்படி நேற்று தென்மேற்கு ஜப்பானில் உள்ள தனேகாஷிமா விண்வெளி மையத்தில் இருந்து ராக்கெட் மூலம் விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

இந்த விண்கலம் 4 அல்லது 6 மாதங்களில் நிலவை சென்றடையும் என்றும் நிலவின் பாறைகளை ஆராய்வதில் ஸ்லிம் விண்கலம் முக்கிய பங்கு வகிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்கலத்தில் சிறிய ரக லேண்டர் உள்ளது. இந்த ராக்கெட்டில் பிரபஞ்சத்தின் தோற்றத்தை ஆராய எக்ஸ்ரே தொலைநோக்கியும் அனுப்பப்பட்டுள்ளது. ராக்கெட் ஏவப்பட்ட 13 நிமிடங்களுக்கு பிறகு எக்ஸ்ரே இமேஜிங் மற்றும் ஸ்பெக்ட்ரோஸ்கோபி மிஷன் என்ற செயற்கை கோள் பூமியின் சுற்றுவட்ட பாதையில் செலுத்தப்பட்டது.

இது விண்மீன் திரள்களுக்கு இடையே உள்ளவற்றின் வேகத்தையும் ஆராயும். இந்த தகவல் மூலம் வான் பொருட்கள் உருவானது எப்படி என்பதை கண்டறிய உள்ளோம். மேலும் பிரபஞ்சம் எவ்வாறு உருவானது என்ற மர்மத்தை தீர்க்க வழி வகுக்கும் என்று ஜப்பான் விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலவை ஆய்வு செய்வதற்கான இத்திட்டத்தில் வெற்றி பெற்றால் நிலவில் விண்கலத்தை தரையிறக்கிய 5 ஆவது நாடாக ஜப்பான் இருக்கும்.

ஏற்கனவே அமெரிக்கா, சீனா, ரஷ்யா, இந்தியா ஆகிய நாடுகள் தங்களது விண்கலங்களை நிலவில் தரையிறக்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இந்த எம்டன்?

## முதல் உலகப் போர் தமிழுக்குக் கொடுத்த சொல்



செப்டெம்பர் 22. 1914. இரவு 9.45. சென்னைத் துறைமுகம் வழமை போல் அமைதியாகக் காணப்பட்டது. மெதுவாகத் துறைமுகத்துக்குள் ஒரு கப்பல் புகுந்தது. திடீரென அதன் தேடல் விளக்குஒளி முன் நின்ற கப்பல்கள் மீது பாய்ந்தது.

மிகப் பிரகாசமான ஒளியில் பெர்மா பெற்றோலியக் கம்பனியின் எண்ணெய் தாங்கிகள் தென்பட்டன. திடீரென ஷெல் குண்டுகள் அத்தாங்கிகளை நோக்கிப் பாய்ந்தன. பத்து நிமிடங்களில் 135 குண்டுகள் பாய்ந்தன. மண்ணெண்ணெய் நிறைந்த தாங்கிகள் பற்றி எரிந்தன. ஒரு கணப்பொழுதில் 125 மில்லியன் கலன் (474 மில்லியன் லீற்றர்) மண்ணெண்ணெய் புகையாகியது.

அப்பால் இருந்த Madras Sailing Club கட்டடம் சேதமடைந்தது. அதற்கு அருகே இருந்த General Post Office, Madras High Court ஆகியவற்றின் கட்டடங்களும் ஓரளவு சேதம் அடைந்தன.. சென்னைச் செய்தித்தாள் Madras Mail அலுவலகத்தின் முன் சில ஷெல் துண்டுகள் வீழ்ந்தன. குண்டுகளை வீசிய கப்பல் விரைவாக வெளியேறியது.

*'எம்டன், எம்டன்'*

துறைமுகப் பகுதியில் இருந்த மக்கள் திகைப்புடன் அல்லோலகல்லோலமாக ஓடினர். நடந்தது என்ன என்பதை அறிந்ததும் பல்லாயிரக்கணக்கான சென்னை வாசிகள் வாயில் "எம்டன், எம்டன்" என்ற வார்த்தை ஒலித்துக் கொண்டே இருந்தது.

அடுத்த சில நாட்களாகத் தென்னிந்தியா முழுவதிலும் ஏன் வடக்கிலும் கூட. அப்பால் இலங்கையிலும் 'எம்டன்' என்ற சொல் ஒலித்துக் கொண்டே இருந்தது. அன்று தமிழ் வழக்கில் புகுந்த 'எம்டன்' என்ற சொல் இன்றுவரை ஒரு நிரந்தர இடத்தைப் பிடித்துள்ளது. தமிழில் மட்டுமல்ல மலையாளத்திலும் 'யமண்டன்' என்ற வடிவைப் பெற்று வழங்குகிறது.

*யார் இந்த எம்டன்?*

1914 ஜுலை 28 இல் கரும் போர் முகில் படர்ந்து கொண்டிருந்த ஐரோப்பாவில் அவுஸ்திரேலிய -ஹங்கேரிப் பேரரசு சேர்பியா வைத் தாக்கியதுடன் முதல் உலகப் போர் மூண்டது.

ஐரோப்பிய நாடுகள் ஒன்றையொன்று எதிர்க்கும் இரு பெரும் குழுக்களாகப் பிரிந்து போரில் இறங்கின. ஒரு புறம் உலகின் மிகப் பெரிய பேரரசாகிய பிரித்தானியப் பேரரசுடன் பிரெஞ்சுப் பேரரசு, ரஷ்யப் பேரரசு, இத்தாலி ஆகிய நாடுகள். பின்னர் ஜப்பானும் அமெரிக்க, ஐக்கிய அரசுகளும் இக் குழுவில் சேர்ந்தன. மறுபுறம் அவுஸ்திரேலியா-ஹங்கேரியுடன் ஜேர்மனி மற்றும் ஒட்டொமன் (ஒஸ்மானில்) துருக்கியர் பேரரசும் சேர்ந்து கொண்டன.

பிரித்தானியப் பேரரசும் பிரெஞ்சுப் பேரரசும் உலகளாவிய வல்லரசுகள். ஜப்பான் கிழக்காசிய வல்லரசு. ஆகவே ஐரோப்பியப் போர் உலகப் போராகியது. ஜேர்மனிக்கு ஆசியாவில் காலனி எதுவும் இருக்கவில்லை. வலுவிழந்து காணப்பட்ட சீனாவில் பிற ஐரோப்பிய வல்லரசுகளைப் போல் ஜேர்மனியும் ஒரு சிறு நிலப் பகுதியைப் பெற்றிருந்தது.

*சீனாவில் ஜேர்மன் படைத்தளம்*

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் காலனித்துவ ஆதிக்கம் பெறும் ஆசையுடன் ஜேர்மனி ஆசியாவுக்கு வந்த போது அங்கு எல்லா நாடுகளும் ஏதோ ஒரு வல்லரசின் கீழ் இருந்தன. சீனாவை முழுமையாக எந்த ஒரு வல்லரசும் கைப்பற்றாவிட்டாலும் வலியிழந்து காணப்பட்ட பேரரசின் நிலங்களை ஐரோப்பிய வல்லரசுகள் மட்டுமல்லாது அமெரிக்காவும் ஜப்பானும் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டன. பிரித்தானியா ஹொங்கொங் தீவைக் கைப்பற்றி அதனை 99 ஆண்டுக் குத்தகைக்குப் பெற்றது போல் ஜேர்மனியும் ஜிஆச்சோ விரிகுடாப் பகுதியைக் கைப்பற்றி 99 ஆண்டுக் குத்தகை ஒப்பந்தத்தைச் சீனப் பேரரசுடன் செய்து கொண்டது.அங்கு சிங்தாலு (Tsingtau இப்போது Qingdao) என்ற இடத்தில் ஜேர்மன் கடற்படைத் தளம் அமைக்கப்பட்டது.


*எம்டன் போர்க் கப்பல்*

இந்தக் கடற்படைத் தளத்தில் 1914 இல் போர் தொடங்கிய போது எம்டன் (Emden) என்ற பெயர் கொண்ட ஜேர்மன் போர்க்கப்பல் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் பெயர் ஜேர்மனியின் நகர் ஒன்றின் பெயரில் இருந்து பெறப்பட்டது. இக்கப்பலின் (Kapitan zur See / Sea Captain) நாயகனாகப் பொறுப்பேற்றிருந்தவர் கார்ள் வொன் முய்ல்லர் (Karl von Muller) என்பவர் ஆவர்.

போர் தொடங்கிய போது ஜேர்மனியை எதிர்த்த வல்லரசுகளின் போர்க்கப்பல்கள் ஆசியாவின் பல பாகங்களில் நின்றன. ஆனால் ஜேர்மனிக்கு உரிய ஒரேயொரு போர்க்கப்பலாக எம்டன் மட்டுமே இருந்தது. இந்நிலையில் எதிரிகளின் போர்க் கப்பல்களைத் தாக்கும் முயற்சிகளை நினைத்தும் பாராது ஆசியாவை விட்டு வெளியேறி ஐரோப்பாவுக்குச் சென்று ஜேர்மனிக்கு உதவுவதே உசிதமாகத் தோன்றியது.

*ஜேர்மனிக்குப் புறப்படுதல்*

சீனாவில் இருந்த ஜேர்மன் கடற்படைத் தளத்தைக் கைவிட்டு அதன் தளபதி தன் கப்பல்களுடன் பசுபிக் சமுத்திரம் வழியாக ஜேர்மனிக்குச் சென்று உதவலாம் என்ற நோக்குடன் புறப்பட்டார். கார்ள் வொன் முய்ல்லர் மறுதிசையில் எம்டன் கப்பலை இந்து சமுத்திரம் வழியாகச் செலுத்தி ஆபிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைத் தாண்டி ஜேர்மனிக்குச் செல்லத் திட்டம் வகுத்தார்.



Emden ship and Karl von Mueller

இந்து சமுத்திரத்தின் எல்லாப் பகுதிகளிலும் பகையரசுகளின் போர்க்கப்பல்கள் நின்றன. பிரித்தானியா அலை கடல்களை ஆள்கின்றது (Brittannia rules the waves) என்ற புகழாரத்தைத் தங்கள் நாட்டுக்குப் பெற்றுக் கொடுத்த பிரித்தானியக் கடற்படையின் கப்பல்கள் போருக்குத் தயாராக எங்கும் காணப்பட்டன. இவற்றைத் தாண்டித் தனியொரு ஜேர்மன் கப்பல் தப்பிச் செல்வது இலகுவான செயலல்ல.

*எம்டனின் தீரச் செயல்கள்*

பகையரசுகளின் போர்க் கப்பல்களைத் தாக்கிச் சேதம் விளைவிக்கும் நோக்கம் முய்ல்லருக்கு இருக்கவில்லை. மாறாக, அக்கப்பல்களுக்கு அகப்படாமல் விலகிப் போய் வேறொரு வகையில் பகைவர்களுக்குச் சேதத்தை ஏற்படுத்த முய்ல்லர் திட்டமிட்டார். அவர் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

பகைவர் கண்ணுக்குப் படாமல் தப்பிக் கொள்ளும் பெரும் சவாலை விட, கப்பலில் உள்ளவர்களுடைய உடல்நலத்தையும் மனநிலையையும் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு முய்ல்லரின் தோளில் சுமையாக இருந்தது. கப்பலில் 399 பேர் (வழமையிலும் பார்க்கக் கூடுதலான எண்ணிக்கை) இவர்களுக்குத் தேவையான உணவு சமைப்பதற்கு வேண்டியவற்றைப் பெறுவதற்கு இந்து சமுத்திரத்தில் எந்த ஒரு துறைமுகத்துக்கும் செல்ல முடியாது. எல்லாமே பகைவர்களுடைய துறைமுகங்கள்.

எம்டன் நீராவிக் கப்பலாகையால் அதற்குத் தேவையான நிலக்கரியைப் பெறுவதும் இன்னொரு சவாலாக இருந்தது. வழமைபோல் எம்டன் கப்பலுடன் அதற்கு எரிபொருள் கொடுக்கும் நிலக்கரிக் கப்பல் (collier) ஒன்றும் கூடவே வந்த போதிலும் வழமை போல் துறைமுகங்களுக்குச் சென்று (re-fuel) புது நிலக்கரியைப் பெற முடியாத நிலை காணப்பட்டது.

முய்ல்லர் மிகுந்த திறமையுடன் இச் சவால்களை எதிர்நோக்கினார். இந்து சமுத்திரத்தில் பகைவர் கப்பல்கள் ஆசிய நாடுகளில் இருந்து போருக்குத் தேவையான பல பொருட்களை ஐரோப்பாவுக்கு எடுத்துச் செல்லும் தீவிர முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் இந்த முக்கியமான வர்த்தகத்தை முறியடித்து ஜேர்மனிக்கு உதவுவதே முய்ல்லரின் நோக்கம். இச்செயலில் பெருவெற்றி பெற்றமைதான் எம்டனுக்குப் புகழைப் பெற்றுக் கொடுத்தது.

*முதல் பலி*

மூன்று வாரங்களின் பின் எம்டன் இந்து சமுத்திரத்தை அடைந்தது. எம்டனுக்கு மூன்று புனல்கள் (funnels) இருந்தன. ஆங்கிலேயர் போர்க் கப்பல்களுக்குப் பொதுவாக நான்கு புனல்கள் இருந்தன. இதனால் எம்டனைப் பகைவர்கள் இலகுவில் அடையாளம் காண முடியும் என்பதால் ஒரு போலிப் புனல் (dummy) மூன்று புனல்களுக்கு அருகில் இணைக்கப்பட்டது.

1914 செப்டெம்பர் முதல் வாரம் எம்டன் வங்காள விரிகுடாவை அண்மித்தது. சிங்கப்பூர், கொழும்பு, ரங்கூன், சென்னை, கல்கத்தா, பம்பாய், அப்பால் செங்கடல் வழியாக ஐரோப்பா செல்லும் கப்பல் பாதைகளை எம்டன் அண்மித்தது. பகைவர் கப்பல்களை வழிமறித்துத் தாக்குவதற்கு எம்டன் தயாராகியது.

செப்டெம்பர் 8. இரவு 11 மணி. தென்பட்டது. இருட்டுக் கண்ணாடி (night glasses) மூலம் அது வர்த்தகக் கப்பல் என அறிய முடிந்தது. எம்டன் அதுக்குக் கிட்ட விரைந்தது. எம்டனில் இருந்து இரண்டு துப்பாக்கிச் சூடு. உடனே கப்பல் நின்றது. இந்து சமுத்திரத்தில் எம்டனின் ஆட்டங்கள் ஆரம்பித்தன.

அகப்பட்ட கப்பல் கல்கத்தாவில் இருந்து பம்பாய்க்கு 6500 தொன் நிலக்கரியை ஏற்றிச் சென்ற கப்பல். எவ்வளவு அதிஷ்டம்!

செப்டெம்பர் 10. இன்னொரு கப்பல். SS Indus. பம்பாய்ய நோக்கிச் சென்று கொண்டிருந்தது. எம்டனிலிருந்து எச்சரிக்கைச் சூடு (warning shot). கப்பல் நின்றது. கப்பலில் ஏற்றப்பட்டிருந்த இறைச்சி, காய்கறி, பழவகை, கோப்பி, தேயிலை மற்றும் உணவுப் பொருட்கள் அனைத்தும் எம்டனுக்கு மாற்றப்பட்டன. இரவு எம்டனில் பெரிய விருந்து. கப்பல் நாயகனும் அலுவலர்களும் எம்டனுக்குக் கொண்டு வரப்பட்ட பின் அது மூழ்கடிக்கப்பட்டது.

*வர்த்தகம்*

இந்து சமுத்திரம் முழுவதிலும் பீதி பரவியது. வர்த்தகக் கப்பல்களைச் செலுத்தியவர்கள் துறைமுகங்களில் இருந்து தம் கப்பல்களை வெளியே கொண்டுவர மறுத்தனர். வர்த்தகம் பெரிதும் பாதிக்கப்பட்டது. அடுத்த இரண்டு மாதங்களாக எம்டன் இந்து சமுத்திரப் போக்குவரத்தை நிலைகுலைத்தது. பிரித்தானிய, ஜப்பானிய, ரஷ்யப் போர்க் கப்பல்கள் எம்டனைத் தேடிப் பிடிப்பதற்குத் துரித முயற்சிகள் எடுத்தும் அவற்றை (யாழ்ப்பாண வழக்கில்) 'உச்சிப்போட்டு' எம்டன் தொடர்ந்தும் சேதம் விளைவித்தது.

ஒருநாள் கல்கத்தா அருகே. மறுநாள் அந்தமான் தீவுகளில். பின்னர் மாலை தீவுகளுக்கு அண்மையில். செப்டெம்பர் 22இல் சென்னைத் துறைமுகத்தில். அதற்குப் பின் மலாயாவின் (இன்றைய மலேஷியா) பினாங் துறையில். அங்கு நங்கூரமிட்டு நின்ற ரஷ்யப் போர்க்கப்பல் Zhemchug மூழ்கடிக்கப்பட்டது. அதையடுத்துப் பிரெஞ்சுப் போர்க்கப்பல் Mousquet தாக்கப்பட்டுக் கடலில் மூழ்கியது.

இத்தனை திகிலடையச் செய்யும் தாக்குதல்களுக்கு மத்தியில் நகைப்புக்கு இடமளிக்கும் ஒரு நிகழ்ச்சியும் நடைபெற்றது. எம்டன் கப்பலுக்குச் சில திருத்த வேலைகள் செய்ய வேண்டியிருந்தது. அத்துடன், எம்டனில் இருந்த போராளிகளுக்குச் சிறிது ஓய்வு கொடுக்க வேண்டிய அவசியமும் இருந்தது. எந்தத் துறைமுகத்துக்கும் செல்ல முடியாத நிலையில் மாலைதீவுக்குத் தெற்கே இந்து சமுத்திரத்தின் நடுவில் இருந்த டியேகோ காசியா தீவுக்குச் செல்ல முய்ல்லர் தீர்மானித்தார்.

*ஆங்கிலேயரின் நல்லுபசாரம்*

டியேகோ காசியா ஆங்கிலேயருக்குச் சொந்தமான தீவு. இன்று அது அமெரிக்கருடைய கடற்படைத்தளமாக உள்ளது. 1914 இல் ஒரு சில ஆங்கிலேய அதிகாரிகள் அங்கு தங்கியிருந்தார்கள். வெளியுலகில் நடப்பதையே அறியாது தூரத்தில் தனித்து நின்ற தீவு.

மிக்க துணிவுடன் இந்த ஆங்கிலேயர் தீவுக்குச் சென்ற போது ஒரு நல்ல விடயம் தெரிய வந்தது. அங்கு இருந்தவர்களுக்கு ஐரோப்பாவில் போர் தொடங்கிய செய்தியே வந்து சேரவில்லை. ஜேர்மனியும் பிரித்தானியர்வும் போர் நடத்துவது தெரியாமல் எம்டனின் போராளிகளை ஆங்கிலேய அதிகாரிகள் நன்கு உபசரித்து. ஓய்வு பெற வசதிகள் கொடுத்து. எம்டனுக்குத் திருத்த வேலைகளைச் செய்யவும் அனுமதித்தனர். ஒரு வாரத்தின் பின் ஆங்கிலேயருடைய போர்க் கப்பல் ஒன்று வந்த போதுதான் நிலைமை தெரியவந்தது.

*கொக்கொஸ் தீவு*

மிகவும் சாதூரியமாகப் பகைவர்களை ஏமாற்றி, வெற்றிகரமாக இருபதுக்கு மேற்பட்ட (ஓர் அறிக்கையின்படி 25) வர்த்தகக் கப்பல்களைக் கைப்பற்றி, அவற்றுள் பெரும்பாலானவற்றை மூழ்கடித்து, ரஷ்யப் போர்க் கப்பல் ஒன்றையும் பிரெஞ்சுப் போர்க் கப்பல் ஒன்றையும் சிதைத்த எம்டனைத் துரத்திப் பிடிப்பதற்காக ஆங்கிலேயர் போர்க் கப்பல்களுக்கு உதவியாக ஜப்பானியர் போர்க்கப்பலும் ரஷ்யர் போர்க் கப்பலும் சேர்ந்தன.

சாதூரியமாக எப்பொழுதும் தப்பிக் கொண்ட எம்டன் இறுதியில் (நவம்பர் 9 இல்) கொக்கொஸ் (Cocos) தீவில் (இலங்கையில் இருந்து தென்கிழக்காக 2850 கிலோமீற்றர் தொலைவில்) அவுஸ்திரேலியாவின் இளம் கடற்படையின் HMAS Sydney என்ற கப்பலால் தாக்கி வீழ்த்தப்பட்டது. அதன் அழகிய தோற்றத்தின் காரணமாகக் கிழக்கின் அன்னம் (Der Schwan des Ostens / Swan of the East) என்ற விருதைப் பெற்றுத் திகிலூட்டும் தாக்குதல்களை நடத்திய எம்டனின் வரலாறு முற்றுப் பெற்றது.

கார்ள் வொன் முய்ல்லர் போர்க்கால ஒழுக்கநெறிகளை இறுக்கமாகக் கடைப்பிடித்த ஒரு சிறந்த போர்க்கப்பல் நாயகன். கைப்பற்றப்பட்ட எதிரிப் போராளிகளை நன்கு கவனித்து, எல்லோரையும் கைப்பற்றிய கப்பல் ஒன்றில் கொழும்புக்கோ அல்லது வேறு கிட்ட இருந்த துறைக்கோ அனுப்பி வைத்தார். ஒரு கைதியாவது கொல்லப்படவில்லை. மிகுந்த கெட்டித்தனத்துடன் மூன்று மாதங்களாக ஆங்கிலேயர் வர்த்தகத்தை முடங்க வைத்துத் தாய்நாட்டுக்கு உதவினார்.


கார்ள் வொன் முய்ல்லர் உண்மையில் ஓர் எம்டன் தான்.

**கா. இந்திரபாலா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீரென ஏற்பட்ட தீ விபத்தால் தும்புத் தொழிற்சாலை எரிந்து நாசம்

## கிளிநொச்சியில் சம்பவம்



(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முகாவில் சக்தி அக்ரோ தும்புத் தொழிற்சாலையில் ஏற்பட்ட திடீர் தீயினால் தொழிற்சாலை எரிந்து நாசமாகியுள்ளது. குறித்த சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் வேளை இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் தும்புத் தொழிற்சாலை தீக்கிரையாகியுள்ளதுடன், தொழிற்சாலை வளாகத்திலுள்ள தென்னை மரங்களும் அருகிலுள்ள காணிகளில் உள்ள தென்னை மரங்களும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

சம்பவ இடத்திற்கு சென்ற கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர், கரைச்சி பிரதேச சபையின் தீயணைப்பு பிரிவினர், இராணுவத்தினர், கிராம சேவகர், கிராம மக்கள் ஆகியோரின் துணையுடன் தீ அனர்த்தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

மேலும், தீ கிராம குடியிருப்புகளுக்கு பரவாத வகையில் தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனினும், குறித்த தும்புத் தொழிற்சாலையின் தீ விபத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-100)

# உர விநியோகம் தொடர்பில் கிளிநொச்சியில் கலந்துரையாடல்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ள 2023/2024 ஆம் ஆண்டிற்கான பெரும்போகத்திற்கான உர விநியோகத்தினை விரைவுபடுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனின் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போகத்தில் 28,415 ஹெக்டேயரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ள நிலையில் உரிய காலத்தில் உர விநியோகத்தை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது பெரும்போக பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இரசாயன உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவற்றை உரிய காலத்தில் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக உர கம்பனி பிரதிநிதிகளுடன் விரிவாக கலந்துரையாடப்பட்டது. மேலும் இம் மாவட்ட விவசாயிகள் உரம் மற்றும் கிருமி நாசினிகளை பெற்றுக்கொள்வதில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ள நிதிமானியம், பெரும்போக பயிர்ச்செய்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மாவட்ட விவசாய பணிப்பாளர், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர், மாவட்ட ஒருங்கிணைப்புகுழு தலைவரின் இணைப்பாளர், தேசிய உரச் செயலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர், விவசாய விரிவாக்கல் திணைக்கள அதிகாரி, பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், துறை சார்ந்த அதிகாரிகள், கமநல சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், உர கம்பனி பிரதிநிதிகள், விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-6-315)

## யாழ்.பல்கலைக்கழக

# ஊடக ஆய்வுகூடத்திற்கு இந்திய துணைத்தூதுவர் விஜயம்



(அராலி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக ஆய்வுகூடத்திற்கு யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் விஜயம் செய்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளி வீதியில் உள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக ஆய்வுகூடத்துக்குச் சென்ற இந்திய துணைத்தூதுவர் ஊடகத் துறையின் மேம்பாடு குறித்து கலந்துரையாடினார்.

மாணவர்களுடன் உரையாடலில் ஈடுபட்ட இந்திய துணைத்தூதுவர் கற்கைகள் தொடர்பான மாணவர்களின் தயாரிப்புகளைப் பாராட்டியதுடன் மாணவர்களுக்கான பயிற்சிகளை நடத்துவதற்கு இந்தியாவில் இருந்து திரைப்பட இயக்குநர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் போன்ற வளவாளர்களையும் அழைப்பதற்கான முன்மொழிவை ஊடக கற்கைகள் துறை சமர்ப்பிக்குமானால் சாதகமாக பரிசீலிப்பதாகவும் தெரிவித்தார். (நி-5-104)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 180 | 150 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 500 | 500 |
| தக்காளி | 160 | 130 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 180 | 180 |
| கோவா | 160 | 150 | 180 | 200 |
| கரட் | 350 | 300 | 350 | 350 |
| பூசணி | 60 | 80 | 80 | 60 |
| புடோல் | 80 | 80 | 80 | 150 |
| வாழைக்காய் | 200 | 220 | 200 | 200 |
| சின்ன வெங்காயம் | 220 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 220 |
| பாகற்காய் | 400 | 350 | 300 | 300 |
| வெண்டைக்காய் | 80 | 80 | 60 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 160 | 200 |
| பயற்றங்காய் | 150 | 150 | 100 | 120 |
| லீக்ஸ் | 160 | 180 | 200 | 200 |
| பீற்றூட் | 120 | 120 | 120 | 160 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 100 | 100 |
| போஞ்சி | 450 | 350 | 300 | 500 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 150 | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 50 | 140 |
| தேசிக்காய் | 700 | 600 | 500 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 70-90 |
| இராசவள்ளி | 350 | 400 | 350 | 400 |
| வெங்காயப்பூ | 250 | 260 | 200 | 400 |
| முள்ளங்கி | 60 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 50 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 30 | 60 |
| ஈரப்பலா | 100 | 70 | 100 | 120 |

# சாவகச்சேரி நகராட்சிமன்றம் ஆதனப் பெயர்மாற்றம்

சாவகச்சேரி நகராட்சிமன்றத்திற்குட்பட்ட வட்டாரம் 08. கச்சாய் வீதி. 278/6 (290/6 பழையது) என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் அப்புக்குட்டி மகாலிங்கம். உரிமைகோருபவர் A.பரமசாமி என்னும் பெயரில் ஆதனவரிப்பெயரேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை விடத்தற்பளை. மிருசுவில் விஜயரத்தினம் உமாசுதன் மற்றும் நுணாவில் மத்தி. சாவகச்சேரியை சேர்ந்த விஜயரத்தினம் பிரபாசுதன் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு நித்தியானந்தன் கேசாந் (LL.B) அவர்கள் மூலம் 314 இலக்க 26.09.2018 ஆம் திகதியில் நிறைவேற்றிய வெளிப்படுத்தல் உறுதிமூலம் பெற்றுள்ளனர்.

மேலும் இவ் வெளிப்படுத்தல் உறுதியில். வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சி பகுதி தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவும் சாவகச்சேரி நகரசபையில் கோவில்பற்று. சாவகச்சேரி இறை J/301 கிராம அலுவலர் பிரிவில் உள்ள "நட்டாலடி" நிலப்பரப்பு 25 குளி 08.19 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் சி.சர்வேஸ்வரன் அவர்களால் 18.08.2018 ஆம் திகதி அளந்து விஸ்தரிக்கப்பட்ட 693 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 3 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு 08 குளி 08.73 எனவும் இதற்கெல்லைகளாக கிழக்கு- தேவானந்தன் அனிந்திராவின் ஆதனம். வடக்கு-ஒழுங்கை. மேற்கு- 693 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் விபரிக்கப்பட்டதன் பிரகாரம் துண்டு 2. தெற்கு-கடற்கரை தரிசு நிலம் என ஆதன விபரம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மேற்படி ஆதனமானது தமது பிரதா காலம்சென்ற குருசாமி விஜயரத்தினத்தின் பூட்டனார் வல்லிபுரம் அப்புக்குட்டிக்கு சொந்தமாக இருந்தது என்றும். குறித்த ஆதனத்தினை அவர் பாராதீனம் செய்யாது விட்டிறக்க குறித்த ஆதனம் அவரின் மூன்று பிள்ளைகளான அப்புக்குட்டி குருசாமி . அப்புக்குட்டி மகாலிங்கம். அப்புக்குட்டி பரமசாமி என்போர்க்கு பிதாவழி முதுசமாக வந்தடைந்தது என்றும் குறித்த அப்புக்குட்டி குருசாமி தனது பாகத்தை பாராதீனம் செய்யாது விட்டிறக்க அவரின் சொரியலான 1/3 பங்கு அவரின் வாரிசுகளான எம்மை வந்தடைந்தது என்றும். மேலும் முழு ஆதனமும் அதன் சொரியற்பங்காளர்களின் இணக்கத்துடன் (5891 ஆம் இலக்க மத்தியஸ்த சபையின் இணக்கம்) பிரிவிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று வெளிப்படுத்தப்பட்டு உறுதி நிறைவேற்றியுள்ளனர்.

பின்னர் நுணாவில் மத்தி. சாவகச்சேரியை சேர்ந்த விஜயரத்தினம் பிரபாசுதன் என்பவரால் அவ்வூரை சேர்ந்த தனது தாயாகிய விஜயரத்தினம் கைம்பெண் மகேஸ்வரிக்கு. பிரசித்த நொத்தாரிசு நித்தியானந்தன் கேசாந் (LL.B) அவர்கள் மூலம் 331 ஆம் இலக்க 24.10.2018 ஆம் திகதியில் நிறைவேற்றிய நன்கொடை உறுதி மூலமும் வேலாயுதம் வீதி. நுணாவில் மத்தி. சாவகச்சேரியை சேர்ந்த மாசிலாமணி சுதர்சன். சுதர்சன் பெண் விஜயந்தினி. விஜயரத்தினம் விஜயசித்திரா ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு நித்தியானந்தன் கேசாந் (LL.B) அவர்கள் மூலம் 592 ஆம் இலக்க 27.06.2020 ஆம் திகதியில் நிறைவேற்றிய உரித்திழத்துலும் உறுதிப்படுத்தலும் உறுதி மூலமும். நுணாவில் மத்தி. சாவகச்சேரியை சேர்ந்த விஜயரத்தினம் உமாசுதன் பிரசித்த நொத்தாரிசு நித்தியானந்தன் கேசாந் (LL.B) அவர்கள் மூலம் 593 ஆம் இலக்க 27.06.2020 ஆம் திகதியில் நிறைவேற்றிய நன்கொடை உறுதி மூலமும் இவ்வாதனம் சென்றடைந்துள்ளது.

தற்போது விஜயரத்தினம் கைம்பெண் மகேஸ்வரி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ. தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற் குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சிமன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செயலாளர்,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி. (16995) 09.09.2023


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 278



வீட்டிலே பெரியவரின் மனைவியும், அவருடைய மருமகளும் மட்டுமே இருந்தார்கள். பெரியவர் குழகர் கோயிலுக்குப் புஷ்ப கைங்கரியம் செய்வதற்காகப் போயிருப்பதாக அவர்கள் சொன்னார்கள். பூங்குழலியைப் பற்றி அவர்களிடம் விசாரிக்க அவனுக்குத் தைரியம் வரவில்லை. அவர்கள் அளித்த காலை உணவை அருந்திவிட்டுச் சுற்றுமுற்றும் கண்களைச் செலுத்தித் தேடிப் பார்த்தான். பூங்குழலி எங்கும் அகப்படவில்லை. ஆலயத்துக்குப் போய்ப் பார்க்கலாம் என்று போனான். அங்கே அவள் தந்தை இருந்தார். கோயிலைச் சுற்றியிருந்த மரங்களிலிருந்து பூஜைக்குரிய புஷ்பங்களைக் கொய்து கொண்டிருந்தார். மலர்களைத் தொடுத்து மாலையாக்குவதற்குச் சில நாள் பூங்குழலி வருவதுண்டு என்றும், ஆனால் இன்றைக்கு வரவில்லையென்றும் கூறினார்.

"எங்கேயாவது காட்டில் மான்களைத் துரத்திக் கொண்டிருப்பாள். அல்லது கடற்கரையோடு திரிந்து கொண்டிருப்பாள். அவளைத் தேடிப் பிடித்துக் கேட்டுப் பார்!" என்றார்.

"தம்பி! ஒரு விடயத்தில் ஜாக்கிரதையாக இரு. அவள் பொல்லாதவள், தப்பர்த்தம் செய்து கொள்ளும்படியாக அவளிடம் ஏதாவது சொல்லிவிடாதே. காவியங்களில் படித்திருப்பதை நினைத்துக் கொண்டு சிருங்கார ரஸத்தில் இறங்கிவிடாதே! உடனே பத்திரகாளியாக மாறி விடுவாள். அப்புறம் உன் உயிர் உன்னுடையது அல்ல!" என்று எச்சரிக்கை செய்தார் பெரியவர்.

முதல்நாள் கனவை நினைத்துக் கொண்டு வந்தியத்தேவன் உடல் சிலிர்த்தான். பிறகு காட்டிற்குள் பூங்குழலியைத் தேடிக்கொண்டு போனான். காட்டிலே எங்கே என்று தேடுவது? சிறிது நேரத்துக்கெல்லாம் அவனுக்கு அலுத்துப் போய்விட்டது. காட்டிலிருந்து வெளியேறினால் போதும் என்று ஆகிவிட்டது. வெளியேறிய பின்னர் கடற்கரையை நோக்கிச் சென்றான். கடற்கரையோடு நீண்ட தூரம் அலைந்தும் பலன் ஒன்றும் இல்லை. பூங்குழலியைக் காணவில்லை. "எப்படியும் மத்தியானச் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வருவாள் அல்லவா? அங்கு பார்த்துக் கொள்ளலாம்!" என்று திரும்பினான். திடீரென்று ஓர் எண்ணம் தோன்றியது. அலையும் ஆட்டமும் அதிகமில்லாமல் அமைதியாக இருந்த அந்தக் கடலில் இறங்கிக் குளிக்க வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. இந்தப் பக்கத்தில் கடலில் ஆழம் அதிகம் இல்லையென்று முன்னமே கேள்விப்பட்டதுண்டு. முதல்நாள் மாலையில் பூங்குழலியும் சொல்லியிருக்கிறாள். பின்னே, இறங்கிக் குளிப்பதற்கு என்ன தடை? கடல் விடயத்தில் அவனுக்கிருந்த பயத்தைப் போக்கிக் கொள்வதும் அவசியம். படகிலும், கப்பலிலும் ஏறிப் பிரயாணம் செய்ய வேண்டிய அவசியம் நேர்ந்திருக்கிறது. கடலைக் கண்டு பயப்பட்டால் முடியுமா? அந்தப் பயத்தைப் போக்கிக் கொண்டே ஆகவேண்டும்.

இடுப்பைச் சுற்றிக் கட்டியிருந்த சுருள் துணியையும் கத்தியையும் எடுத்துக் கடற்கரையில் வைத்துவிட்டுக் கடலில் இறங்கினான். மெள்ள மெள்ள ஜாக்கிரதையாகக் காலை வைத்து நடந்தான். போகப் போக முழங்கால் அளவு ஜலத்துக்கு மேல் இல்லை. சிறிய அலைகள் வந்து மோதிய போது ஜலம் இடுப்பளவுக்கு வந்தது. அதற்கு மேலே இல்லை. "அழகான சமுத்திரம் இது! அமிழ்ந்து குளிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லையே?" என்று சொல்லிக் கொண்டே இன்னும் மேலே சென்றான்.

'அடேடே! ஆழம் இல்லை என்று எண்ணிக் கொண்டே கரையிலிருந்து வெகுதூரம் வந்து விட்டோமே? திடீரென்று கடல் பொங்கினால்? அலைகள் பெரிதாகி மோதினால்?' இந்த எண்ணம் தோன்றிக் கரைப் பக்கம் திரும்பிப் பார்த்தான்.

(தொடரும்....)



# சிறுவர் அரங்கம்

## மோட்டியும் ப்ளாக்கியும்..

ஒரு குட்டி வீட்ல அழகான ஒரு பூனையும், நாயும் வாழ்ந்து வந்துச்சுங்க.. அந்த குட்டி நாயோட பேரு மோட்டி, அது எப்போதும் துறுதுறுன்னு இருக்கும், என்ன கொடுத்தாலும் சாப்பிடும். அது ஒரு சமத்து நாய்க்குட்டி. அந்த வீட்ல இருக்குற பூனையோட பேரு ப்ளாக்கி, ஆனா அது பேருக்கும் அதுக்கும் சம்மந்தமே இருக்காது. ஏன்னா அது ரொம்ப வைட் ஆ புசு புசுனு இருக்கும். ப்ளாக்கி மீன் மட்டும்தான் சாப்பாடா எடுத்துக்கும், ஆனா மோட்டி குடக்குறதெல்லாம் சாப்பிட்டுக்கும். இவங்க ரெண்டு பேரு கூடவும் குட்டி பசங்க அழகா விளையாடுவாங்க.



ப்ளாக்கிக்கு அத எப்போவும் கொஞ்சிகிட்டே இருக்கனும் மோட்டிய யாரும் தூக்க கூடாதுனு நெனைக்கும். அப்படி மோட்டி கூட யாராச்சும் கொஞ்சி விளையாடிட்டா அவங்க பக்கம் கூட போகாது இந்த ப்ளாக்கி. அதுக்கு வைக்கிற உணவை சாப்பிட்டு மூஞ்ச தூக்கி வச்ச மாதிரி போய் ஓரமா படுத்துக்கும். அதுதான் அதோட ஒரிஜினல் சுபாவம்.

ஒருநாள் அவங்க வீட்ல உள்ள எல்லோரும் பக்கத்துல நடக்குற பொருட்காட்சிக்கு போகலாம்னு யோசிச்சாங்க. ஆனால் அங்க வீட்டு பிராணிகளை கூட்டி போக அனுமதி இல்லை. அதனால மோட்டி மற்றும் ப்ளாக்கிய விட்டு போக முடிவு பண்ணாங்க. மோட்டி, பிளாக்கி சோகமா இருந்துச்சுங்க. ஆனால் வீட்டில் இருக்கும் அப்பா, அம்மா, குழந்தைகள் வீட்டுக்கு திரும்பி வர நேரம் ஆகும் ங்கறதால சாப்பிடுறதுக்கு உணவை தயார் செய்து வச்சாங்க.

உணவை பாத்ததும் மோட்டி ஓடி போய் சாப்பிட போனது. அது நல்ல சாப்டுட்டு வந்து அதோட இடத்துல சமத்தா இருந்துச்சு. என்னடா இவ்ளோ சீக்கிரம் சாப்டுட்டானே இந்த மோட்டி, நம்மள கூட்டிட்டு போகாம விட்டுட்டு போறாங்கன்னு சொரணை இருக்கா கோபம் கூட வராதா இவனுக்குனு மனசுக்குள்ள நெனச்சிக்கிட்டே கோவமா இருந்தாலும் சாப்பிட போச்சு நம்ம ப்ளாக்கி. ஏமாத்திட்டீங்களேடா! பாலும், ப்ரெட்டுமா நான் சாப்பிடுற மீன் எங்கடா னு அப்பா, அம்மாவ மொறச்சு பாத்துச்சு, பாவம் அது பேசுறது நமக்குத்தான் புரியாதே! அவங்களும் சரி ப்ளாக்கி சாப்பிட போகுதுனு கிளம்பி போக ஆரம்பிச்சாங்க.. பூனைக்கு செம கோபம், ஓடி வந்து சோஃபால இருந்து ஜன்னல் வழியே அவங்கள எட்டி பாத்து மொறச்சிகிட்டே இருந்துச்சு.. அவங்க கிளம்பி போய்ட்டாங்க.. ப்ளாக்கி சோகமா சோஃபால படுத்துகிச்சு.

நம்ம மோட்டி, சாப்டுட்டு ஜாலியா விளையாடிட்டு இருந்துச்சு. ப்ளாக்கி அத பார்த்து கோவப்பட்டாலும் சாப்பிடல. அப்டியே சோகமாவே மீன் இல்லையேன்னு வருத்தப்பட்டுட்டே இருந்துச்சு. கொஞ்ச நேரத்துல ப்ளாக்கிக்கு பசி எடுக்க ஆரம்பிச்சிது. புலி பசித்தாலும் புல்ல திங்காதுடா.. ன்னு பாலையும் ப்ரெட்டையும் சுத்தி வந்துகிட்டே இருந்தது. இத பார்த்த மோட்டி, இந்த பூனை என்ன பண்ணுதுனு பாத்துகிட்டே இருந்துச்சு. விளையாடி, விளையாடி நம்ம மோட்டி சோர்ந்தும் போச்சு. ப்ளாக்கி என்னனா அதோட சாப்பாட வெறிச்சு பாத்துகிட்டே ஷோபாவுக்கு வந்துச்சு. சரி போய் சாப்பிடுவோம் பசி வேற கிள்ளுதே அப்படினு நடந்து உணவை தேடி வந்த ப்ளாக்கிக்கு பெரிய ஷாக்.. அதோட பால், பிரட் ரெண்டும் காலி. ஆமா நம்ம மோட்டி சாப்ட்ருச்சு. வடை போச்சேன்னு சோகமா போய் டுச்சு ப்ளாக்கி.

ஆகா குழந்தைகளே, உங்கள்ல எத்தனை பேருக்கு இந்த மாதிரி கிடைச்சதும் போச்சேன்னு நடந்துருக்கு. நமக்கு கிடைச்சத வச்சி நாம சந்தோசமா இருக்கனும். இல்லனா அதுவும் நமக்கு கிடைக்காம போயிடும்.

ஆகையால் இருப்பதை வைத்து திருப்தி அடைந்து கொள்வதே புத்திசாலித்தனம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அநேகர் தங்கள் காலத்தில் பெரும்பாகத்தை பிறரை அவலத்துக்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர். ~ லா புரூயர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிழைகள் பலரிடம் மாட்டுப்பட்டவர் ஒருவர்

யாழ்.போதனா வைத்தியசாலையில் எட்டு வயதுச் சிறுமி ஒருவரின் கை அகற்றப்பட்ட சம்பவம் நாடு முழுமையிலும் பேசுபடுபொருளாகியுள்ளது.

ஊசி மருந்து ஏற்றியதில் ஏற்பட்ட தவறு காரணமாக சிறுமியின் இடது கையின் மணிக்கட்டுப்பகுதி அகற்றப்பட வேண்டியதாயிற்று.

இத்துயரச் சம்பவம் தொடர்பில் விசாரணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

எனினும் அந்த விசாரணை இலங்கை அரசாங்கம் கூறுகின்ற உள்ளக விசாரணைக்கு ஒப்பானதென்பது மட்டும் உண்மை.

எதுவாயினும் பாதிக்கப்பட்ட பிள்ளையின் பெற்றோர், கை அகற்றப்பட்ட விவகாரத்தை நீதிமன்றுக்கு கொண்டு சென்றுள்ளனர்.

எனவே நீதிமன்ற விசாரணை நிச்சயம் ஒரு நல்ல தீர்ப்பை வழங்கும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் உண்டு.

இவை ஒரு புறமிருக்க, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நடந்த தவறுகள், பிழைகள் பாதிப்புகள் கொஞ்சமல்ல.

எனினும் நம் தமிழ் மக்கள் விதியின் பேரால் தங்களை ஆற்றுப்படுத்துபவர்கள் என்பதால் யாழ்.போதனா வைத்தியசாலை இதுகாறும் சட்டத்தின் பிடிக்குள் சிக்காமல் தப்பிக் கொண்டது.

உண்மை. சலரோக நோய்க்கு ஆளாகியிருந்த ஒருவர் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக தனியார் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவரிடம் ஆலோசனை பெற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ஆனால் அவர் அனுமதிக்கப்பட்டு மூன்று நாட்களாக குறித்த சத்திரசிகிச்சை நிபுணர் அந்த நோயாளியைப் பார்வையிடவேயில்லை.

நான்காவது நாள் பார்வையிட்ட அந்த சத்திரசிகிச்சை நிபுணர்; காலில் உள்ள காயம் மாறிவருவதாகக் கூறிவிட்டுச் சென்றார்.

அவ்வளவுதான் இரண்டு நாட்களின் பின்னர் பிரஸ்தாப நோயாளியின் கால் முழங்காலுடன் அகற்றப்பட்டது.

கால் அகற்றப்பட்டு சில மாதங்களில் அவர் உயிரிழந்து போனார்.

இப்படியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் நடந்த ~ நடக்கின்ற நிட்டூரங்கள் கொஞ்சமல்ல.

இவ்வாறான அக்கிரமங்களுக்கு தனி ஒருவரை மட்டும் சுட்டிக்காட்ட முடியாது. அதற்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் ஒட்டுமொத்த நிர்வாகமும் பொறுப்பு.

உண்மை. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை என்பது ஒரு மாகாண நிர்வாகத்துக்கு ஒப்பானது.

அந்த நிர்வாகத்தை நடத்துவதென்பது சாதாரணமான விடயமல்ல.

அதற்குத் தனியான பணிப்பாளர் நியமிக்கப்பட்டார். அந்தப் பணியை மருத்துவர் சத்தியமூர்த்தி மிகத் திறம்படச் செய்தார். அவருக்கு மக்கள் மத்தியில் மிக உயர்ந்த மதிப்பு இருக்கிறது.

ஆனால் அவர் பணிப்பாளர் பதவிக்கு மேலதிகமாகப் பதவிகளைப் பொறுப்பெடுத்தபோது யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் தளர்வு கண்டது.

வைத்திய நிபுணர்களில் சிலரைத் தவிர ஏனையவர்கள் தனியார் வைத்தியசாலைகளின் மூலஸ்தானக் கடவுளர்களாக ஆகிவிட்டனர். எனவே இந்தத் தவறுகள் நிவர்த்திக்கப்பட வேண்டும்.

உண்மையைச் சொல்லப்போனால் சிறுமியின் கை அகற்றப்பட்ட விடயத்தில் பிழைகள் பலரிடம் உண்டு. பல இடங்களில் உண்டு. ஆனால் அகப்பட்டவர்தான் ஒருவர். இதுவே சத்தியமான உண்மை.

# ஜனாதிபதியின் தீர்மானங்களே நாட்டை மீட்க உதவியது

## சாகல ரத்நாயக்க

(கொழும்பு)

ஜனாதிபதி ரணிலின் காலோசிதமானதும் துணிச்சலானதுமான தீர்மானங்கள் நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்க உதவியதாக தேசிய பாதுகாப்பு தொடர்பிலான அதிபரின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 16ஆவது சர்வதேச ஆய்வு மாநாட்டின் ஆரம்ப நிகழ்விலேயே சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு எதிர்நோக்கும் பொருளாதார சவால்கள் குறித்து விளக்கமளித்த சாகல ரத்நாயக்க, பொருளாதார பிரச்சினைகளை நிவர்த்தி செய்து, நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தையும் விளக்கினார்.

அதனால் கிட்டியுள்ள மேம்பாடுகளை வரவேற்ற அவர், நாட்டின் முன்னேற்றத்திற்காக அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

"டிஜிட்டல் மாற்றம், நிலைத்தன்மை, துறைசார் மாற்றங்கள் என்பவற்றுக்கு ஈடுகொடுக்க கூடிய இயலுமை" என்ற தொனிப்பொருளின் கீழ் பல்வேறு துறைசார் தொழிலாளர்கள் மற்றும் ஆய்வாளர்களின் கண்டுபிடிப்புக்கள் ஊடாக கிட்டிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி பீ.நந்தலால் வீரசிங்க இந்நிகழ்வில் சிறப்புரை ஆற்றியதோடு, அமெரிக்க உடலியல் மற்றும் மருத்துவத்தில் நோபல் பரிசு பெற்றவருமான அரிசோனா மாநில பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் லேலண்ட் ஹார்ட்வெல் இணையத்தினூடாக உரை நிகழ்த்தினார். (ம-7,9)

### மதுபோதையில் பஸ் சாரதி

## பஸ் - மோ.சைக்கிள் விபத்து; 13 வயது சிறுமி உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - ஓட்டமாவடியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 13 வயது சிறுமி உயிரிழந்துள்ளார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓட்டமாவடி பாலத்திற்கு அருகில் இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

காவத்தமுனை பனிச்சையடியை சேர்ந்த குறித்த சிறுமி, தனது தந்தையுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த நிலையில், தனியார் பஸ் ஒன்றுடன் மோதி விபத்து நேர்ந்துள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த சிறுமியின் தந்தை வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர் மது போதையில் இருந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச் சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,9)

## கொழும்பில் விசேட போக்குவரத்து திட்டம்

(கொழும்பு)

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிகளை முன்னிட்டு இன்றுமுதல் கொழும்பில் விசேட போக்குவரத்து திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய இன்று முதல் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி நடைபெறும் தினங்களில் கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கை சுற்றியுள்ள வீதிகளில் விசேட போக்குவரத்து திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மேலும், 2023ஆம் ஆண்டுக்கான ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இன்று 9, 10, 12, 14, 15ஆம் திகதிகளிலும், 17ஆம் திகதி இறுதிப் போட்டியும் கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** மல்லாகம் நீதிமன்றம், அளுக்கை-அளவெட்டி, மல்லாகம் நீதிமன்றம் பிரதேசம் நெபாட் வலைத் தொழிற்சாலை, ஸ்ரீலங்கா ஐஸ் தொழிற்சாலை, ATI குருநகர், கட்டிட திணைக்களம் - கடற்கரை வீதி, சீனோர் குருநகர், ஐஸ் தொழிற்சாலை - கடற்கரை வீதி, கடற்கரை வீதி பழைய பூங்கா வீதி சந்தி, கொன்வெண்ட் பிரதான வீதி, டேவிட் வீதி கடற்கரை வீதி, குருநகர், பாசையூர் ஈச்சமோட்டை வீதி, பெரிய கோவில், புங்கங்குளம் கொழும்புத்துறை வீதி அளுக்கை - அளவெட்டி, அளவெட்டி பலநோக்கு கூட்டுறவு சபை அல்லாரை, அம்மன் கோவிலடி - கச்சாய் தெற்கு, கச்சாய், கெற்பெலி, வெள்ளம்பொக்கட்டி ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

## வெல்லவாயவில் ஒருவர் வெட்டிப் படுகொலை

(கொழும்பு)

வெல்லவாய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கங்பங்குவ பகுதியில் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

வீடொன்றுக்குள் வெட்டுக்காயங்களுடன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வழங்கப்பட்ட தகவலுக்கமைய 33 வயதான ஒருவரே சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தநபர் தனது தாய் மற்றும் சகோதரிகளுடன் வசித்து வந்த நிலையில், வீட்டில் எவரும் இல்லாத சந்தர்ப்பத்தில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் மது போதைக்கு அடிமையான ஒருவர் எனவும் அயல்வீட்டாருடன்மோதலில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், இந்தக் கொலை தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில்,

வெல்லவாய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

28



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

### இலங்கை

இலங்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அரசாங்கக் கடன் 1950 முதல் 2022 வரை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சராசரியாக 71.23 சதவீதமாக இருந்தது.இது 2022 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 113.80 சதவீதமாக உயர்ந்ததையும் 1951 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 16.30 சதவீதமாகவும் இருந்தது.

### இலங்கையின் கடன் ஏன் அதிகமாக உள்ளது?

இந்த விவாதங்கள் ஒருபுறம் இருக்க, இலங்கையின் வீழ்ச்சிக்கான உடனடி காரணம் நாட்டின் கடனின் கட்டமைப்பே - குறிப்பாக, அதிக வட்டி விகிதத்தில் வழங்கப்பட்ட சர்வதேச இறையாண்மைப் பத்திரங்களாகும். 2022 ஆம் ஆண்டின் இறுதியில், இலங்கையின் மொத்த பொதுக் கடன் (நிலுவைத் தொகை உட்பட) 83.6 பில்லியன் USD இற்கு சமமாக இருந்தது.

### மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் சீனாவின் கடன் என்ன?

சீனாவில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அரசாங்கக் கடன் 1995 முதல் 2022 வரை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சராசரியாக 36.55 சதவீதமாக இருந்தது. 2022 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 76.90 சதவீதத்தை எட்டியது மற்றும் 1997 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20.60 சதவீதமாக இருந்தது. சீனாவின் மொத்த அரசாங்கக் கடன் சுமார் $23 டிரில்லியன் என மதிப்பிடுகிறது. இது மாகாணங்கள் மற்றும் நகரங்களால் அமைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான நிதி நிறுவனங்களின் மறைமுகக் கடன்களை உள்ளடக்கியது.

குறைந்த கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் பொதுவாக விரும்பத்தக்கதாக இருந்தாலும், அது ஆரோக்கியமான பொருளாதாரத்தைக் குறிக்க வேண்டிய அவசியமில்லை. பல தேங்கி நிற்கும் அல்லது வளரும் பொருளாதாரங்கள் குறைந்த கடன்-வருமான விகிதத்தைக் கொண்டுள்ளன. ஏனெனில் அவற்றின் கடன் நிலை மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி இரண்டும் குறைவாக உள்ளன. உண்மையில், சில சந்தர்ப்பங்களில், ஒரு நாட்டின் பொருளாதாரம் நீண்ட காலத்திற்கு ஆரோக்கியமானதாக இருக்கும். அந்த நாடு மற்றொரு நாட்டிலிருந்து கடன் வாங்கி பொருளாதார வளர்ச்சியில் அதிக முதலீடு செய்தால். இது கடன் வாங்கும் நாட்டின் கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தை தற்காலிகமாக அதிகரிக்கும். ஆனால் பொருளாதாரத்தை (மற்றும் GDP) வளர்ச்சியடையச் செய்து. கடனை அடைத்து, எதிர்காலத்தில் அதிக லாபத்தைத் தொடரலாம். இருப்பினும், பொருளாதார வளர்ச்சிக்கு உத்தரவாதம் இல்லை.

**20 உலக நாடுகளின் வெளிநாட்டுக்கடனும் வெளிநாட்டுக்கடன் -உள்நாட்டு மொத்த உற்பத்தி விகிதமும்**

| | நாடு/பிராந்தியம் | அமெரிக்க டாலர்கள் | அளவிடப்பட்ட திகதி | கடன்-GDP விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | அமெரிக்கா | 31.4 டிறிலியன் | யூலை 2023 | 123.4 |
| 2 | ஐக்கிய இராச்சியம் | 8.73 டிறிலியன் | யூன் 2022 | 273.06 |
| 3 | பிரான்ஸ் | 7.04 டிறிலியன் | யூன் 2022 | 253.35 |
| 4 | ஜெர்மனி | 6.46 டிறிலியன் | யூன் 2022 | 160.35 |
| 5 | ஜப்பான் | 4.36 டிறிலியன் | யூன் 2022 | 101.41 |
| 6 | சீனா | 2.64 டிறிலியன் | யூன் 2022 | 14.39 |
| 7 | ஆஸ்திரேலியா | 1.83 டிறிலியன் | 31 செப்டம்பர் 2020 | 130 |
| 8 | ஸ்வீடன் | 956பில்லியன் | செப்டம்பர் 2022 | 159.5 |
| 9 | சிங்கப்பூர் | 814 பில்லியன் | மார்ச் 2023 | 134.16 |
| 10 | தென் கொரியா | 719பில்லியன் | செப்டம்பர் 2022 | 48.1 |
| 11 | இந்தியா | 624.7 பில்லியன் | செப்டம்பர் 2022 | 19.2 |
| 12 | நெதர்லாந்து | 555பில்லியன் | டிசம்பர் 2021 | 52 |
| 13 | இந்தோனேசியா | 518பில்லியன் | ஜனவரி 2023 | 39.5 |
| 14 | ரஷ்யா | 348பில்லியன் | 1 ஜூலை 2023 | 17.36 |
| 15 | மலேசியா | 245பில்லியன் | டிசம்பர் 2022 | 60.4 |
| 16 | வியட்நாம் | 142பில்லியன் | டிசம்பர் 2021 | 39.1 |
| 17 | பாகிஸ்தான் | 122பில்லியன் | 30 செப்டம்பர் 2021 | 43 |
| 18 | பங்களாதேஷ் | 78.4பில்லியன் | 16 அக்டோபர் 2021 | 22 |
| 19 | லெபனான் | 39.6பில்லியன் | 30 ஏப்ரல் 2022 | 220 |
| 20 | புருனே | 340 மில்லியன் | 2017 | 2.8 |

### இந்தியாவின் வெளிநாட்டுக்கடன்

2021 மார்ச் இறுதியில், 573.7 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்த இந்தியாவின் வெளிநாட்டுக்கடன், 2022 மார்ச் இறுதியில் 8.2 சதவீதம் அதிகரித்து 620.7 பில்லியன் அமெரிக்கன் டொலர் ஆகியுள்ளது. நீண்டகால கடன் அளவு 499. 1 பில்லியன் அமெரிக்கன் டொலர் என்றும், குறுகிய காலக் கடன் அளவு 121.7 பில்லியன் அமெரிக்கன் டொலர் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. வெளிநாட்டு மொத்தக் கடனில் 90 சதவீதம் வணிகக்கடன்கள், வெளிநாடு வாழ் இந்தியர்களின் வைப்புத்தொகைகள் குறைந்தகால வர்த்தகக்கடன், பலவகை கடன்கள் ஆகியவையாகும்.

உள்நாட்டு மொத்த உற்பத்தி விகிதத்தில் வெளிநாட்டுக்கடன் அளவு ஓராண்டுக்கு முன் 21.2 சதவீதம் என்பதிலிருந்து கணிசமாக குறைந்து 2022 மார்ச் இறுதியில், 19.9 சதவீதம் ஆகியுள்ளது. அந்நிய செலாவணி கையிருப்பு விகிதத்தில் ஓராண்டுக்கு முன் 100.6 சதவீதம் என்பதை விட 2022 மார்ச் இறுதியில் 97.8 சதவீதம் என வெளிநாட்டுக்கடன் லேசாக குறைந்திருந்தது.

USA தலைக்கு மிஞ்சி கடனில் முழுகியுள்ளது. இந்தியாவின் கடன் இன்னமும் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த அளவுகளை பார்க்கும் பொழுது. இன்னொரு உண்மையையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தியா போன்ற பல நாடுகள் (நாட்டவர்) USA விலுள்ள வங்கிக் கணக்குகளில் டொலராக வைத்துள்ளன. இந்த தொகைகளும் USA பிற நாடுகளுக்குக் கொடுக்க வேண்டிய நிலுவையில் சேரும். எடுத்துக்காட்டாக இந்தியா மட்டுமே 500-600 பில்லியன் டொலர்கள் USA வங்கிகளிலும் கடன் பத்திரங்களிலும் சேமித்து வைத்துள்ளது. (Forex reserve). இந்தியாவும் சீனாவும் சேர்ந்து USA வில் வைத்துள்ள கணக்குகளைச் சேர்த்தால் சில டிரில்லியன் டொலர்கள் வரும்.

அமெரிக்க வெளிநாட்டுக் கடன்களில் (பிணைமுறிகள்) 10 பெரிய பங்குகளைக் கொண்ட நாடுகள் ஜனவரி 2023 வரை பின்வருமாறு: ஜப்பான்: $1.1 டிரில்லியன், சீனா: $859 பில்லியன், இங்கிலாந்து: $668 பில்லியன், பெல்ஜியம்: $331 பில்லியன், லக்சம்பர்க்: $318 பில்லியன், சுவிட்சர்லாந்து: $291 பில்லியன், கேமன் தீவுகள்:$285 பில்லியன், கனடா: $254 பில்லியன், அயர்லாந்து: $253 பில்லியன், தைவான்: $235 பில்லியன்

### பரிஸ் கிளப் என்றால் என்ன?

கடனாளி நாடுகள் அனுபவிக்கும் கொடுப்பனவு சிரமங்களுக்கு ஒருங்கிணைந்த மற்றும் நிலையான தீர்வுகளை கண்டறிவதில் முக்கிய பங்கு வகிக்கும் பெரிய கடன் வழங்கும் நாடுகளின் அதிகாரிகள் குழுவே பரிஸ் கிளப் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

பரிஸ் கிளப்பில் 22 நிரந்தர உறுப்பு நாடுகள் உள்ளதுடன் இதில் பெரும்பாலான மேற்கு ஐரோப்பிய மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகள், அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜப்பான் ஆகியவை அடங்குகின்றன.

பரிஸ் கிளப்பின் முக்கிய செயற்பாடு கடனாளி நாடுகளுக்கு அவர்களின் பணம் செலுத்தும் பிரச்சினைகளுக்கு உதவுவதாகும். இது இரண்டு வழிகளில் அடையப்படுகிறது. முதலில், தகுதியுள்ள நாடுகளுக்கு கடன் வசதிகளை வழங்குவதன் மூலம், (இதற்கு கடனாளி நாடுகள் சில நிபந்தனைகளை பூர்த்தி செய்யவேண்டும்). இரண்டாவதாக, கடன்பட்ட நாடுகளுக்கு தீர்வுகளை வழங்குவதன் மூலம் அவர்கள் ஆதரிக்கின்றனர். பரிஸ் கிளப்பில் அங்கம் வகிக்காத சீனாவும் இந்தியாவும் இலங்கைக்கு அதிகளவு கடன்களை வழங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

### மறுநிதியளிப்பும் கடன் மறுசீரமைப்பும் (Refinancing vs Debt Restructuring)

உங்கள் கடனை மறு நிதியளிப்பது என்பது உங்கள் ஏற்கனவே உள்ள கடனை அடைக்க புதிய கடனை எடுப்பதாகும். இது குறைந்த வட்டி விகிதத்தையும் குறைந்த மாதாந்திர கட்டணத்தையும் பெற உதவும். இருப்பினும், வருமானத்தின் அடிப்படையில் புதிய கடனுக்கு நீங்கள் தகுதி பெற வேண்டும். கடன் மறுசீரமைப்பு வேறுபட்டது.அதில் நீங்கள் உங்கள் கடனாளிகளுடன் சேர்ந்து புதிய திருப்பிச் செலுத்தும் திட்டத்தை உருவாக்குவீர்கள்.

### கடன் தள்ளிப்போடுதல் (Debt Deferment)

கடன் ஒத்திவைப்பு உங்கள் கடனில் பணம் செலுத்துவதை தற்காலிகமாக நிறுத்த அனுமதிக்கிறது. நீங்கள் நிதி நெருக்கடியை அனுபவித்து, சாதாரண நிலைக்குத் திரும்புவதற்கு சிறிது நேரம் தேவைப்பட்டால் இது ஒரு நல்ல தேர்வாக இருக்கும்.

(தொடரும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## குளவி கொட்டு...

ரும் சிகிச்சைக்காக அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,9)

## சுகாதார அமைச்...

அளிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டதை அடுத்து, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி காலை 9.30 வரை சபை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## வீடு புகுந்து...

இருந்த 10ஆயிரம் ரூபா பணம், 1/4 பவுண் தோடு, 1/4 பவுண் மோதிரம் மற்றும் காஸ் சிலிண்டர் ஒன்று என்பன களவாடப்பட்டுள்ளன.

அந்த வீட்டின் சமையலறையானது வீட்டிற்கு 20 மீற்றர்கள் தள்ளி அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமையல் அறையில் வைக்கப்பட்டிருந்த மேற்படி பணம் மற்றும் பொருட்களே இவ்வாறு திருடப்பட்டுள்ளன. (ம-7,9)

## காற்றின்...

யுள்ளது.

தென்மேற்கு பகுதியில் 30 முதல் 40 கிலோமீற்றர் வேகத்திலும் குறித்த கடற்பரப்புகளில் 55 முதல் 60 கிலோமீற்றர் வேகத்திலும் காற்று வீசும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னாரில் இருந்து காங்கேசன் துறை வரையான கடற்பரப்புகளில் மணித்தியாலத்துக்கு 45 முதல் 50 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (ம-7,9)

## இரு பெண்...

தெடுக்கப்பட்டதோடு துப்பாக்கி ரவை மற்றும் ஆடைகள் மீட்கப்பட்டுள்ளன.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் நேற்று முன்தினம் வியாழனன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இந் நிலையில் மூன்றாம்நாள் அகழ்வாய்வுகள் நேற்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது.

இந்த மூன்றாம் நாள் அகழ்வாய்வின் போது விடுதலைப் புலிகள் அமைப்பின் பெண் போராளிகளின் மனித எச்சங்கள் இரண்டு முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டதுடன், அந்த மனித எச்சங்களுடன் மீட்கப்பட்ட பெண்களின் உள்ளாடைகளிலும், பச்சைநிற முழுநீள காற்சட்டைகளிலும் இலக்கமிடப்பட்டிருந்துள்ளது. அத்தோடு குறித்த மனித எச்சங்கள் இரண்டிலும் துப்பாக்கி ரவைகள் இருந்துள்ளமையும் அவதானிக்க முடிந்துள்ளது.

இது தொடர்பில் குறித்த அகழ்வுப் பணியில் இணைந்திருந்த சட்டத்தரணிகளுள் ஒருவரான கே.எஸ். நிரஞ்சன் கருத்துத் தெரிவிக்கையில்,

ஏற்கெனவே இனங்காணப்பட்ட இரண்டு மனித உடல்களின் மனித எச்சங்கள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் இரண்டும், விடுதலைப் புலிகள் அமைப்பின் பெண் போராளிகளுடையதாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

அத்தோடு அகழ்வாய்வில் எடுக்கப்பட்ட ஆடைகளில் இலக்கங்களிடப்பட்டுள்ளன.

அதற்கமைய முதலாவது மனித எச்சத்தின் பச்சைநிற நீளக் காற்சட்டையில் 3204 என்ற இலக்கமும் முழுநீள கையுடைய மேற்சட்டையும் 3174 இலக்கமுடைய பெண்களின் உள்ளாடையும், மார்புக் கச்சையும் எடுக்கப்பட்டது.

தொடர்ந்து இரண்டாவது மனித எச்சம் அகழ்ந்தெடுக்கப்பட்டது. அதிலும் பச்சைநிற முழுநீளக் காற் சட்டையும், முழுநீளக் கையுடைய மேற் சட்டையும், 1564 இலக்கமுடைய உள்ளாடையும், மார்புக்கச்சையும் எடுக்கப்பட்டது

அதேவேளை அகழ்ந்தெடுக்கப்பட்ட இருமனித எச்சங்களிலும் துப்பாக்கி ரவைகள் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

மேலும் அவ்வாறு ஆடைகளில் இலக்கங்கள் மாத்திரமே பொறிக்கப்பட்டுள்ளதுடன், கறுப்பு நிறத்திலான நூலினாலேயே ஆடைகளில் இலக்கங்கள் பொறிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் குறித்த அகழ்வுப் பணி இடம்பெறும் இடத்தில் தொல்லியல் ஆய்வாளர் பரமு புஷ்பரட்ணம், யாழ்ப்பாணம் சட்டவைத்திய அதிகாரி, சட்டத்தரணி ரனித்தா ஞானராசா, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள், தடயவியல் பொலிஸார், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் இராமலிங்கம் சத்தியசீலன், சமூக செயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், கொக்குத்தொடுவாய் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கி.சிவகுரு ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

குறித்த மனிதப் புதைகுழி வளாகத்தில் பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எச்சங்களும், தடயப்பொருட்களும் பொதியிடப்பட்டு, சட்டவைத்திய அதிகாரியால் பகுப்பாய்வுகளுக்காக எடுத்து செல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,9,299)

## நட...

பட்ட விவகாரம் தொடர்பில் விரிவான அறிக்கை கிடைத்துள்ளது. விரிவான விசாரணை மேற்கொண்டபின் இது தொடர்பில் பாராளுமன்றுக்கு அறிவிக்க முடியும் எனத் தெரிவித்தார். (ம-7,9)

## அதிக...

யீட்டு விழா நேற்றுக்காலை அலரி மாளிகையில் நடைபெற்றது.

இதன்போது அமைச்சுகளின் செலவினங்களை ஆய்வு செய்ய அரசாங்கம் தீர்மானம் எடுக்கவுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செலவுகள் குறித்த அறிக்கைகள் நாட்டின் மூன்று மொழிகளிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7,9)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

நாகபூஷணி அம்மன் அருளுடன்
07.09.2023 அன்று இடம்பெற்ற **மஹஜன சம்பத** லொத்தர் சீட்டிழுப்பில் **100000/=** வெல்லப்பட்டுள்ளது. இந்த லொத்தர் சீட்டிழுப்பு யாழ்ப்பாணம் முகவர் **கனகலிங்கம் திலகவதி** அவர்களால் வெல்லப்பட்டுள்ளது.
அலைகள் ஓய்ந்தாலும் கனகலிங்கம் திலகவதி முகவர் ஊடாக வெல்லப்படும் பரிசு அலை ஓயாது.
நீங்களும் வாங்குங்கள்; கனகலிங்கம் திலகவதி முகவர் ரிக்கெட்டுக்களை

(16992)

மெகா பவர்
திகதி 08/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1579
O 02 30 56 60 68
54479

தன நிதானய
திகதி -2023.09.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1261
F 15 41 45 82 F
34129

லக்கி 7
திகதி 08.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0057
L7 இலக்கம் 2 8
வெற்றி இலக்கினம்: தனுசு
வெற்றி இலக்கங்கள் 5 2 7 8 8 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3473
சீட்டிழுப்பு திகதி 08.09.2023
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 32 47 59 66
D
56150
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.08
சீட்டிழுப்பு இலக்கம் 540
மிதுனம் 08 13 49 50 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/09/08
சீட்டிழுப்பு இலக்கம் 5231
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
Y 9 7 8 3 3 9
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2205
வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.09.08
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 02 06 39 51 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,554,580.40
செகண்ட் சான்ஸ் விசேட இல. 12316 834
DLB

சனிதா
திகதி 2023.09.08 வெற்றி வாரம் 4366 வர்ணம் செம்மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 04 23 58 62 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,786,568.00
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 40721 ரூ.400/- பணப்பரிசு 377
DLB அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி SASIRI
வெற்றி வாரம் 373
சீட்டிழுப்பு திகதி 2023.09.08
பச்சை
வெற்றி இலக்கங்கள் 08 18 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,088,000/-
DLB www.dlb.lk

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3917
வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.08
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 05 23 50
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,552,936/-
செகண்ட் சான்ஸ் விசேட இல. 10613 978
DLB

கப்ருக
திகதி 2023.09.08 வெற்றி வாரம் 1381 வர்ணம் ஊதா
S 06 47 55 58 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 437,453,104.20
செகண்ட் சான்ஸ் விசேட இல. 37609 678
DLB தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அட கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2031
சீட்டிழுப்பு திகதி: 2023.09.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,941,648/-
வெற்றி இலக்கங்கள் 18 48 54 74 H
Special No. 34981 606
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோயிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (16957)

**077 728 6061**

## வேலையாள் தேவை

யாழ் நகரில் இயங்கும் வியாபார கடைக்கு ஆண் வேலையாள் தேவை.
சம்பளம் 30,000/= Basic
முன்னனுபவம் தேவையில்லை. (16999)

**078 911 3766**

## வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கும் புத்தக, போட்டோ கொப்பி கடைக்கு ஊழியர்கள் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும். (16987)

**076 832 3682**

## மணமகள் தேவை

1987 ஆம் ஆண்டு மீனராசி உத்திரட்டாதி நட்சத்திரம் 11 ஆம் வீட்டில் சூரியன் செவ்வாய் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. (16996)

**071 658 7658**
**076 060 6232**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் காங்கேசன் துறையில் (K.K.S) 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
புகையிரத நிலையத்தில் இருந்து 1 Km தூரத்தில்
தொடர்புகளிற்கு (16998)

**075 521 3533**

## Flight Tickets Booking....

கனடா, லண்டன், பிரான்ஸ் மற்றும் ஏனைய நாடுகளுக்கான விமானப் பயணச்சீட்டு முன்பதிவுகள் மற்றும் Travel insurance களினை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். (17008)

Apex Travels - யாழ்ப்பாணம்

**077 759 7598**

# JOB VACANCY

## Suganth Seafood (Pvt) Ltd, Jaffna

### கணக்காளர் (ஆண்)

**தேவையான தகுதிகள் மற்றும் அனுபவம்**

- ICASL/CIMA தேர்வுகளில் பகுதி/ முழு அல்லது AAT தேர்வுகளில் முழுமையாக தகுதி பெற்றிருக்க வேண்டும்.
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் கணக்கியல் அல்லது நிதியியலில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
- Accounting Software இல் பணிபுரியும் திறன் மற்றும் Microsoft Excel இல் சிறப்பு தேர்ச்சி.
- நிதி அல்லது கணக்கியல் துறையில் குறைந்தபட்சம் 5 - 10 ஆண்டுகள் அனுபவம்
- ஆங்கிலத்தில் நல்லறிவும், சிங்களம் தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.
- 45 வயதுக்கு கீழ் உள்ளவராக இருக்க வேண்டும்.

**விண்ணப்பிக் வேண்டிய முறை:**

தொடர்பு விபரங்களுடன் உங்கள் CV ஐ info@suganth.lk க்கு அனுப்பவும், நீங்கள் விண்ணப்பித்த Position ஐ மின்னஞ்சலில் குறிப்பிடவும். (16977)

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 258/= | (max2Kg) |
| 1 Kg கோதுமை மா | - 183/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 197/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 289/= | (max2kg) |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 437/= | |
| 1 Kg தீட்டல் | - 186/= | (Max 3Kg) |
| 1 Kg றவை | - 288/= | |
| 400 g அங்கர் பால்மா | - 1050/= | ~~(1080/=)~~ |
| 400 g அன்லீன் பால்மா | - 1250/= | ~~(1350/=)~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= | ~~(80/=)~~ |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - 262/= | ~~(330/=)~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 140/= | ~~(175/=)~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 360/= | ~~(430/=)~~ |

1050/-



~~1080/-~~ (17008)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30


## இரத்த...

சிங்களத் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சப்பாத்தாக நான் இருந்திருந்தால் கூட பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டிருப்பேன். தோல்விப் பயம் காரணமாக ரணில் விக்கிரமசிங்க தேர்தலுக்குச் செல்லவில்லை.

நாட்டின் வீழ்ச்சியை ரணில் விக்கிரமசிங்கவால் விரைவாகத் தடுத்து நிறுத்த முடிந்தது. ஆனால், ஊழல் அரசியல் வாதிகளுடன் இணைந்து பணியாற்றியதால் அவரால் முன்னேற முடியவில்லை.

ஊழல் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே அரசில் உள்ளார்கள். ரணில் திருடுகின்றார் என்று நான் நினைக்கவில்லை. ஆனால், அவரைச் சுற்றியுள்ள அனைவரும் திருடுகின்றார்கள்.

ஊழல், மோசடியே நாட்டைப் பின்னுக்குத் தள்ளும். இவ்வாறான ஊழல், மோசடி வஞ்சகர்கள் அதிகாரத்தில் உள்ளார்கள்.

மக்கள் கோபமாக இருக்கின்றார்கள். கோட்டாபயராஜபக்ஷவின் விலகலுக்குப் பின்னர் அவர்கள் எதிர்பார்த்தது நிறைவேற்றவில்லை. அடுத்த அரகலய நிம்மதியாக இருக்காது. அது இரத்த வெள்ளமாக இருக்கும். மக்களின் கோபத்தைக் குறைத்து மதிப்பிடாதீர்கள் என்றார். (ம-7.9)

## கனேடி...

கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்தார். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவுடன் சந்தித்துக் கலந்துரையாடினார்.(ம-33.104)


## CANADA VISA

1)Minor Education - (Age Limit - 7 to 17 years) தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2)Visitor Visa - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
3)Student Visa-IELTS 6.00 உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.(Jan 2024)
4)Work and Study Program - Course fee after Visa மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
5) Caregiver Vacancy available - experience உள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும். (17003)

Contact : VISA Consultant,
136, Adlyapatham Road, Thirunelvely, Jaffna. T.P : 077 038 5584

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7187)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 5392, 076 315 6470**

## வெளிநாடுகளுக்கான DHL பொதிகள் சேவை

மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 400/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம்நெற்

T.P : 0777 55 45 28 (17005)
321, K.K.S. Road, Jaffna.

## வேலைவாய்ப்பு

பருத்தித்துறை வேலும்மயிலும் பவுண்டேசனில் ஆண் அலுவலகக் காவலர் தேவை.
- வயது 25 - 35
- முன்அனுபவம் விரும்பத்தக்கது.
- ஒட்டுநர் உரிமம் அவசியம்
- வடமராட்சி பகுதியில் வசிப்பது விரும்பத்தக்கது.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர் உங்கள் Curriculum Vitae (CV) mail to : info@velummayiumfoundation.org என்ற மின்னஞ்சல் மூலமாகவோ தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தரலாம்.
முடிவுத் திகதி : 15.09.2023 (17011)

வேலும் மயிலும் பவுண்டேசன்
ஓடைக்கரை வீதி, பருத்தித்துறை

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் | V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-7221)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-7221)




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். | V2 TRAVELS

**0777-068-777**

## கொழும்பு விலையில்...

### யாழ் நகரில் கோழிகள் விற்பனைக்கு உண்டு

புறோயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ் ஊர்க்கோழி, சேவல், விறாத்து குஞ்சுகள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. முட்டைகள் அனைத்தும்ஒரே இடத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
(சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தரப்படும்)

- 1Kg புறோயிலரின் விலை - 1250/=
- 1Kg புறோயிலர் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி,

24 மணிநேர சேவை

## நியூ சிற்றி பாம்
## நியூ சிற்றி கோழிக்கடை

இல.8, சின்னக்கடை
மார்க்கெட் குருநகர், யாழ்ப்பாணம். (17006)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல. 21, ... யாழ்ப்பாணம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org